விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 168 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை (04.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வட மாகாணத்தில் தனியார் துறை முதலீடுகளுக்கான சாத்தியம்

## 14 முன்னணி கம்பனிகள் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் தனியார் துறை முதலீடுகளுக்கான சாத்தியங்கள் தொடர்பில் 14 முன்னணி தனியார் துறைக் கம்பனிகள் ஆராய்ந்துள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாணத்தில் பாடசாலைகள் இன்று இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில்பாடசாலைகள் வழமைபோன்று இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும், புதிய உயர்தர மாணவர்களுக்கான வகுப்புக்களும் இன்று ஆரம்பமாகும் எனவும் வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர்திரு.யோன் குயின்ரஸ் அறிவித்துள்ளார். ▷15

## லிட்ரோ சமையல் எரிவாயு விலை
### இன்று முதல் மாற்றம்

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை குறைக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த புதிய விலை திருத்தம் இன்று நள்ளிரவு முதல் நடை ▷15

## சீரற்ற காலநிலையால் இரு நாட்களில் 17 பேர் உயிரிழப்பு; 87 ஆயிரம் பேர் பாதிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் கடந்த 48 மணிநேரத்துக்குள் 17 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் ஐவரின் சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை.

மாத்தறை மாவட்டத்தில் நால்வரும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஐவரும் கொழும்பு மாவட்டத்தில் மூவரும் ▷15

## போலி ஆவணங்களை உருவாக்கி மருத்துவராக நடித்து யாழில் பண மோசடி செய்தவர் கைது

### அதிசொகுசு கார், 15 பவுண் நகை, ரூ.5 இலட்சம், 5 கைபேசிகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

போலி ஆவணங் ▷15

## யாழ்.மாவட்டத்தில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மரங்கள் தொடர்பில் அறிவிக்குக

(யாழ்ப்பாணம்)

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆபத்து ஏற்படுத்தக்கூடிய மரங்கள் தொடர்பான விபரங்களை தெரியப்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய, பொதுப் போக்குவரத்து பாதைகள், பாடசாலைகள்மற்றும் ஏனைய இடங்களில் காணப்படும் உயிராபத்து விளைவிக்கக்கூடிய முழுமையாக அல்லது பகுதியளவில் ▷15

## ரவுடித்தனமான அரசியல்வாதிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர்
### ஜே.வி.பி தலைவர் அநுரகுமார

(குருநாகல்)

"அரகலய"வுக்குப் பின்னர் பின்வாங்கிய ஊழல் மற்றும் ரவுடித்தனமான அரசியல் வாதிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரகலயவின் உண்மையான அபிலாஷைகள் நிறைவேற வேண்டுமானால், மக்கள் எழுச்சியின் உண்மையான நோக்கத்தை பேணுகின்ற அரசாங்கமொன்று நிறுவப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் பேரணியில் கலந்துகொண்டு ▷15

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதி பார்வையிட்டார்



▷02

## 150 ரூபாயினால் சிமெந்து விலை குறைந்தது

(கொழும்பு)

ஜூன் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 50 கிலோ கிராம் சிமெந்து மூட்டை ஒன்றின் விலை 150 ரூபாயி ▷15

## ஐ.நா பிரதிநிதி யாழ்.விஜயம் பல தரப்புக்களுடன் சந்திப்பு



▷03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாத நின்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளிநொச்சியில் கணிதப்பிரிவில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவன் முதலிடம்

(கிளிநொச்சி)

அண்மையில் வெளியான கல்விப் பொது தராதர (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப்பிரிவில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவன் சேகரன் சிவகுமரன் முதலிடத்தினை பெற்றுள்ளதோடு நாடளாவிய ரீதியில் 52 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளார். (ம-7,10)

# நீர்வேலியில் விபத்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியோரமாக தரித்து நின்ற கார் மீது பின்னால் வேகமாக வந்த முச்சக்கர வண்டி மோதியுள்ளது. இச்சம்பவம் நீர்வேலி வில்லுமதவடி திருப்பத்திற்கு அருகில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முச்சக்கர வண்டியை செலுத்தியவரின் முகத்தில் பலத்த காயமடைந்த நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ம-7,10,33)

லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1083)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719

WESTERN UNION WU moving money for better · MoneyGram. · Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

## ஜனாதிபதி...

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை ஆராய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்பார்வைப் பயணமொன்றை நேற்றுப் பிற்பகல் மேற்கொண்டார்.

அதன்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான பணிப்புரைகளை ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மோசமான காலநிலையால் முழுமையாக சேதமடைந்த வீடுகளை முப்படையினரின் உதவியுடன், அரசாங்கத்தின் செலவில் புதிதாக நிர்மாணிப்பதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குமான பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான

# விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சை 2023 (2024) விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் 2024 ஜூன் 08 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சீரற்ற கால நிலைக்கு மத்தியில் பரீட்சார்த்திகள் மதிப்பீட்டு நிலையங்களுக்கு செல்வதில் ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜூன் 06 ஆம் திகதி தொடங்க திட்டமிடப்பட்ட நிலையில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஜூன் 08 முதல் ஜூன் 17 வரை நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 101 நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

அவசர அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப் பிக்கப்படவுள்ளது. (ம-7,10)

# கண்ணீர் அஞ்சலி

யூனியன் கல்லூரியின் முன்னாள் பொற்கால அதிபர்
அமரர்

## கதிர்காமர் பாலசுந்தரம்



பிறப்பு: 14.01.1928 இறப்பு: 01.06.2024

1979 - 1986 வரை யூனியன் கல்லூரியின் புகழ் பூத்த பொற்கால அதிபராக கடமையாற்றி ஓய்வின் பின்னரும் 38 வருடங்களாக பாடசாலை வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய அதிபர் அவர்கள் இன்று எம்மோடு இல்லை. அன்னாரது ஆத்மா சாந்தியடைய புவனேஸ்வரி அம்பாள் பாதங்களை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

06.06.2024 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7:30 மணிக்கு அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். அந்நிகழ்வில் கல்லூரி சமூகத்தோடு முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

(0091) யூனியன் கல்லூரிச் சமூகம்

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 04 - 1953



இறப்பு 01 - 06 - 2024

## திருமதி கிருஸ்ணானந்தன் கமலாதேவி

பெரியார் பகுதி அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணானந்தன் கமலாதேவி (கமலா) அவர்கள் 01.06.2024 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - வள்ளியம்மை தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற சிவகுரு - பகவதி தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருஸ்ணானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் சுதர்சன்(கனடா), காலஞ்சென்ற பகிரதன் மற்றும் முரளிதரன்(கனடா), கார்த்திகா, கீதா(கனடா), விஜிதரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கேசவன், ஜெனனி(கனடா), காயத்திரி(கனடா), சாருஜன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஸ்வினி, அக்சனா, தஸ்மிகா, சாத்விக், ரிதமிகா, ருத்ரன், ருத்ரி, அகன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவபாதசுந்தரம் (குட்டி) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய் 021 226 2385 குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 07 - 1942



இறப்பு 01 - 06 - 2024

## திருமதி நடராசா இந்திராணி

நல்லூரைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இந்திராணி அவர்கள் கடந்த 01.06.2024 சனிக்கிழமை அன்று காலமாகியுள்ளார்.

அன்னார் தம்பிஜயா - பொன்னம்மா அவர்களின் பாசமிகு மகளும் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீ ரமணன், ஸ்ரீ விமலன், நளாயினி, ஸ்ரீ அமலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.06.2024 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 583 4835
(விமலன்)

247,
கச்சேரி - நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(1088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை பிற்போடும் முயற்சிகள்;
## எதிர்ப்பு தெரிவித்து ஐ.நா அலுவலகத்திடம் கடிதம்

(கொழும்பு)

**தேர்தல்களை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர்.**

பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளதை தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிவில் சமூக பிரதிநிதிகள் பாலித ரங்க பண்டாரவின் கருத்தினை ஜனநாயக விரோத கருத்து என குறிப்பிட்டுள்



ளனர்.

மக்கள் போராட்ட பிரஜைகள் அமைப்பு தேசிய சிவில் அமைப்புகளின் முன்னணி மின்சார பாவனையாளர்கள் சங்கம் உட்பட பல அமைப்புகள் இணைந்து இந்த கடிதத்தை இலங்கைக்கான ஐக்கியநாடுகளின் அலுவலகத்திடம் கையளித்துள்ளனர்.

கடந்த மே 28 ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கை மக்களின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ள சிவில் சமூக பிரதிநிதிகள் இதன் காரணமாக சமூகத்தில் மிகவும் முரணாண நிலை தோன்றியுள்ளது.

தேர்தல்களிற்காக காத்திருக்கும் மக்களிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் தெரிவீத்துள்ள விடயம் மிகவும் பாரதூரமானது.

பாலித ரங்க பண்டாரவின் இந்த அறிவிப்பிற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என தெரிவித்துள்ள இலங்கையின் சிவில் சமூக பிரதிநிதிகள் தேர்தல் ஆணையாளரை அமெரிக்க தூதுவர் சந்தித்துள்ளமை மிக முக்கியமானது.

இலங்கையின் ஜனநாயகம் குறித்து நம்பகதன்மை மிக்க பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக பொதுமக்கள் கருதுகின்றனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ.நாவும் இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களும் ஐக்கியதேசிய கட்சியின் பொதுச்செயலாளர் மன்னிப்பு கோரவேண்டும் என வேண்டுகோள் விடுக்க வேண்டும் ஜனநாயகம் தொடர்பில் இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை தடுப்பதற்காக தலையீடு செய்ய வேண்டும் எனவும் தங்கள் கடிதத்தில் சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ரி-6)

# ஐ. நா.வதிவிடப் பிரதிநிதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்
## பல தரப்புக்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்ததுடன் பலதரப்பினர்களுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டார்.



நல்லை ஆதீனத்திற்குச் சென்ற ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளை சந்தித்து ஆசிபெற்றதுடன், நல்லூர் கந்தசுவாமி கோவிலும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.



அதனைத் தொடர்ந்து பொதுசன நூலகத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

இந்தியா - இலங்கை இடையேயான பாக்கு நீரிணையை கடந்த சிறுவன் தன்வந்தை சந்தித்த ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பாராட்டு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-6-33)

# தெற்கு அதிவேக வீதியின்
## கடுவெல-பியகம தற்காலிகமாக மூடல்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் கடுவெல - பியகம இடைமாற்றத்தின் கடவத்தை வரையான பகுதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



களனி ஆற்றின் நீர் மட்டம் அதிகரிப்பதன் காரணமாக இந்த இடமாற்றப் பாதை முற்றாக மூடப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடுவெலயிலிருந்து மாத்தறை நோக்கி வாகனங்கள் உட்செல்லவும் வெளியேறவும் முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும், கடவத்தையிலிருந்து கடுவெல நோக்கி வாகனங்கள் உட்செல்லவும் வெளியேறவும் முடியாத நிலை காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ரி-6)

# நளின் பயணித்த வாகனம் விபத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பயணித்த ஜீப் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


அதன்படி நேற்று அதிகாலை கொழும்பு - கண்டிவ பிரதான வீதியில் கொங்கஸ் தெனிய சந்திக்கு அருகில் நளின் பண்டார பயணித்த ஜீப் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.


பாராளுமன்ற உறுப்பினரின் கார் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த போது வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது ஜீப் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது பயணித்த எவருக்கோ காயம் ஏற்படவில்லை எனவும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வட்டுபிட்டிவல ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மேலும் நிட்டம்புவ பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய மட்ட பெண்களுக்கான தைக்கொண்டோ போட்டி

## சாணுஜா வெண்கலம்

தேசிய மட்ட பெண்களுக்கான தைக் கொண்டோ போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.சாணுஜா வெண்கல பதக்கத்தை கைப்பற்றினார்.

தேசிய மட்ட பெண்களுக்கான தைக் கொண்டோ போட்டிகள் நேற்று முன்தினம் கண்டி நாவலப்பிட்டிய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 52 கிலோ எடைப் பிரிவில் வடமாகாண பருத்தித்துறை பிரதேச செயலகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த கே.சாணுஜா வெண்கல பதக்கத்தை கைப்பற்றினார். யாழ்.பல்கலைக்கழக கலைப் பிரிவு மாணவியான இவர் கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழகத்தின் தைக்கொண்டோ அணியின் அணி தலைவராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

# சாதிப்பார் கம்பீர்



இந்திய அணியின் புதிய பயிற் சியாளர் நியமனம் குறித்து கங்குலி கூறுகை யில், “இந்தியாவில் கிரிக்கெட் திறமை க்கு பஞ்ச மில்லை. முன்னாள் இந்திய வீரர் ஒருவரை புதிய பயிற் சியாளராக நியமிப்பதே நல்லது.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க கடந்த மே 27 தான் கடைசி திகதி. பி.சி.சி.ஐ., விரும்பினால், காலக் கெடுவை நீடிக்கலாம். பயிற்சியாளர் பதவிக்கு கவுதம் கம்பீர் விண்ணப்பித்தாரா என தெரியவில்லை.

ஐ.பி.எல்., தொடரில் பயிற்சியாளராக செயற்பட்டு கொல்கத்தா அணி கோப்பை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். வெற்றி தாகம் கொண்டவர். இவருக்கு விருப்பம் இருந்தால், இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கலாம். சிறந்த பயிற்சி யாளராக ஜொலிப்பார்,” என்றார். (நி-6)







# போராடி வென்ற மே.இந்திய தீவு

ரி-20 உலகக் கோப்பை லீக்போட்டியில் 6 பந்துகள் மீதமுள்ள நிலையில் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது மேற்கிந்திய தீவுகள் அணி.

ரி-20 உலகக் கோப்பை தொடர் அமெரிக்கா மற்றும் மே.இந்திய தீவு நாடுகளில் நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 2 ஆவது லீக் போட்டியில் மே.இந்திய மற்றும் பப்புவா நியூகினியா அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற மே.இந்திய தீவு அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

துவக்கம் முதலே சிறப்பாக பந்துவீசிய மே.இந்திய அணி பப்புவா நியூ கினியாவை 136 ரன்களில் கட்டுப்படுத்தியது. பப்புவா நியூகினியா சார்பில் சேசே பான் அரை சதம் கடந்தார். டோர்ஜியோ 27 ரன்களை சேர்த்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

எளிய இலக்கை துரத்திய மே.இந்திய அணியின் துவக்க வீரர் ஜான்சன் சார்லஸ் தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார். மற்ற வீரர்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

போட்டி முடிவில் மே.இந்திய தீவு அணி 5 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்களை குவித்து, ஐந்து விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. பப்புவா நியூகினியா சார்பில் அசாத் வாலா 2 விக்கெட்டுகளையும், ஜான் கரிகோ, சாட் சோபர் மற்றும் அலெய் நவோ தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (நி-6)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரயிலின் இயந்திரம் திடீரென தீப்பிடித்தது

(பதுளை)

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பொடி மெனிக்கே கடுகதி ரயிலின் இயந்திரத்தில் திடீரென தீப்பிடித்தது.

நேற்று திங்கட்கிழமை ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் வைத்தே ரயிலின் பின் புறத்திலுள்ள இயந்திரத்தில் தீப்பிடித்துள்ளது.

ஹப்புத்தளை ரயில் நிலைய ஊழியர்கள் மற்றும் பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர்.

இந்நிலையில், ரயில் பயணம் இரண்டு மணித்தியாலங்கள் தாமதமடைந்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (நி-6)

# பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தில் அள்ளுண்டு சென்ற வாகனம்

(கொழும்பு)



நாட்டில் சீரற்ற கால நிலை நிலவி வரும் நிலையில் வெள்ளநீரில் சிக்குண்ட கப் ரக வாகனத்தை அங்கிருந்த இளைஞர்கள் இணைந்து பெரும் முயற்சிக்குப் பின்னர் மீட்டெடுத்துள்ளனர். பெலும்மஹர சந்தியில், கொடகெத பாலத்துக்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெலும்மஹர சந்தியில் பல அடிக்கு மேல் வெள்ளநீர் நிரம்பியிருந்தது. இந்நிலையில் சிக்குண்ட கப் ரக வாகனம், சாரதியின் கட்டுப்பாட்டை மீறி, இழுத்துச் செல்லப்பட்டது.

இதன் போதே, அங்கிருந்த இளைஞர்கள் ஒன்றுகூடி, கப் ரக வாகனத்தை மீட்டதுடன், சாரதியையும் காப்பாற்றியுள்ளனர். (நி-6)


## கேள்வி கோரல்-2024

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நடாத்துவதற்குப் பொருத்தமான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா 1000 ஐ 04.06.2024 ஆம் திகதி முதல் 20.06.2024 ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் கல்லூரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தை தகைமை, அனுபவ நற்சான்றிதழ்களுடன், பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் 20.06.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் -2024 "எனக் குறிப்பிடப்படவேண்டும்.

கிடைத்த கேள்விகோரல்கள் யாவும் 22.06.2024 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்பட்டு தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.

**பிற்குறிப்பு:**

முற்று முழுதாகத் தரமான, ஆரோக்கிய உணவுவகைகளை (Healthy Foods) வழங்க முன்வரும் ஒப்பந்தக்காரருக்கு எமது கட்டணத்தில் பொருத்தமான விலக்கு அளிக்கப்படும்.

தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,யாழ்ப்பாணம்.
021 222 2431

(சி-516)



## 1ம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி

மலர்வு 05 . 12 . 1997



உதிர்வு 15 . 06 . 2023

### அமரர்.ஜனார்த்தனன் கனிஸ்ரா

"கடவுள் காகிதம் என்று நினைத்து
அழகிய கவிதை ஒன்றைக் கிழித்துவிட்டான்"

பிரம்மன் எழுதி வைத்த மண்ணில்
வந்த கவிதையொன்றை
படிக்கும் முன்பே பாதியிலே
கிழித்ததேனோ இறைவா
பொட்டு வைத்த வண்ண நிலவொன்று
எம்மையெல்லாம் விட்டுச் சென்றதேனோ
சிட்டுக்குருவியாய் சிறகடித்த
சிலையொன்று எம்
நெஞ்சையெல்லாம் சிறைப்படுத்தி
சென்றதேனோ
அள்ளி அள்ளி அன்பைத்தந்த பூவொன்று
வாடி நிலத்தில் வீழ்ந்ததேனோ

உன் பட்டுப்பாதம் நடந்த பாதை இன்று
பாவை உன் வருகை இன்றி பதறுகின்றது
வாழும் வயதினில் வாசமலர் ஒன்றின்
வண்ணம் கலைத்ததேனோ இறைவா!
நீ மீண்டு வருவாயென நாம்
வேண்டாத தெய்வமில்லை
இருந்தும் மீண்டும் இந்த மண்ணில் வருவாயென...
நித்தம் நித்தம் உன் அழகிய நினைவுகளை சுமந்தபடி
ஓராண்டல்ல நாம் உயிர் வாழும் காலம் வரை....

(0089)

மூளாய் வேரம்,
மூளாய்.

உம் நினைவுகளுடன்
அன்புக் கணவன்
பு.ஜனார்த்தனன்(ஜனா)


## இராசிபலன்

04.06.2024
வைகாசி 22 , செவ்வாய்க்கிழமை
திரயோதசி முன்னிரவு -9.35 மணிவரை
பரணி முன்னிரவு - 10.24 மணிவரை

சுபநேரம் -10.22-11.52 மணிவரை
இராகுகாலம்-2.52-4.22 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம் -
பூரம், உத்தரம்.

வளவன்

**மேஷம்** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,பணியில் சிறு மன உழைச்சல் ஏற்படலாம், கனவு பலித முண்டு, போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், பக்குவமாய் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்** எண்ணிய காரியம் எளிதில் கைகூடும், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் தல கலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை தென்படும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்கள் சந்திப்பு உண்டு.

**கன்னி** கவலைகள் தீர பரம்பொருளை வழிவட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும் நாள்,சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் , அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள் வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலம் உண்டு.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா மருத்துவமனையில் என்பு மச்சை மாற்று சிகிச்சை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவ மனையில் என்பு மச்சை மாற்று சிகிச்சைக்கு தேவை யான மருந்து கொள்வ னவிற்காக சந்நிதியான் ஆச் சிரம கலாநிதி செ.மோகன தாஸ் சுவாமிகள் ரூ.525,000 நிதியினை போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் மருத் துவர் த.சத்தியமூர்த்தியிடம் நன்கொடையாக வழங்கி னார்.

இலங்கையில் அரச மருத் துவமனையில் மகரமக அபேக்சா புற்றுநோய் மருத்து வமனையில் மாத்திரமே என்பு மச்சை மாற்று சிகிச்சையானது மேற்கொள்ளப்படுகின்றது. வட பகுதி நோயாளர்கள் மகரகம புற்றுநோய் மருத்துவமனை யில் இந்த சிகிச்சையைப் பெற பல வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படு கின்றது. இந்நிலையில் குறித்த சிகிச்சையினை யாழில் ஆரம் பிப்பதனால் வட பகுதி நோயா ளர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப் பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6)

# இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு சட்டவிரோதமாக வந்த ஐவர் கைது

(மன்னார்)

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமான முறையில் பட கில் தலைமன்னார் ஊர்மனை பகுதிக்கு வருகை தந்த இலங் கையைச் சேர்ந்த 5 பேர் நேற்று திங்கட்கிழமை காலை தலைமன்னார் ஊர்மனை கடற்கரைப் பகுதியில் வைத்து கடற்படையினர் கைது செய் துள்ளனர்.

குறித்த 5 நபர்கள் கடற்படை யினரால் விசாரணைக்கு உட் படுத்திய பின்னர் தலைமன் னார் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு, தலை மன்னார், வவுனியா, கிளி நொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37,39,24,26 மற்றும் 38 வயதுடைய ஆண்கள் என தெரிய வந்துள்ளது.

குறித்த 5 பேரும் இலங் கையில் இருந்து இந்தியா விற்கு கடந்த சில வருடங்க ளுக்கு முன் சென்றுள்ள நிலை யில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வசித்து வந்துள் ளனர்.

விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்கள் மன்னார் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வுள்ளனர். (நி-6-285)

# கைபேசியை திருடி விற்ற குற்றச்சாட்டில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கையடக்கத் தொலை பேசியை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த வாரம் யாழ். நீதி மன்ற வளாகத்திற்கு அருகில் தரித்து நின்ற முச்சக்கரவண்டி யில் வைத்து பூட்டப்பட்ட ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை துவிச்சக்கர வண்டியில் வந்த மர்ம நப ரொருவர் திருடிச் சென்றுள் ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்ட நிலையில் கண்காணிப்பு கமராவை அடிப் படையாகக் கொண்டு சந்தேக நபர் மானிப்பாய் சாவற்கட்டு பகுதியில் வைத்து யாழ்.பிராந் தியப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேகநபர் திருடிய கைபேசியை 30 ஆயிரம் ரூபா வுக்கு ஆறுகால் மடத்தைச் சேர்ந்த நபருக்கு விற்பனை செய்ததாக விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்து அதனை வாங்கியவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் கைபேசி யையும் மீட்டுள்ளனர். (நி-6-33)




மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது நினைவேந்தல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது. (படம்: மகாலிங்கம்)

# கலாசாலையில் சுற்றாடல் தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் நடத்தும் சுற்றாடல் தினத்தை ஒட்டிய கணித விஞ் ஞான உபகரணக் கண்காட் சியும் மரம் நாட்டும் நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்க லைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி நாகமுத்து பிரதீபராஜாவும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப்பணிப்பாளர் த.சுபோகரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (நி-6-33)

# மின்னல் தாக்கத்தால் எரிந்த பனைமரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பகு தியில் இடிமின்னல் தாக்கம் காரணமாக பனைமரங்கள் எரிந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடியுடன் கூடிய மழை பெய்த நிலையில் மின்னல் தாக்கம் காரணமாக சுன்னாகம் தெற்குப் பகுதியில் இரண்டு பனைமரங்கள் எரிந்துள்ளன. (நி-6)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரை யாண்டிற்கான முழு நேர கற்கைநெறிகள் எதிர்வரும் 01.07.2024 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இக்கற்கைநெறிகள் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்க ளில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின் னிணைப்பாளர், கணிய அள வையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துனர், முச்சக்கரவண்டி திருத்துனர், அலுமினியம் பொருத்துனர், கணனி வன் பொருள் திருத்துனர், கணனி படவடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், கட்டட நிர்மான உதவியாளர், பெண் கள் அழகுக்கலை வல்லுநர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள் ளது.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் - 4 (NVQ-4) சான்றுதலுக்கான பயிற்சிநெறி களாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 07.06.2024 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்க ளினை பெற்றுக் கொள்வதற்கு 0212227949, 0710318737 எனும் தொலைபேசி இலக்கங்க ளுடன் தொடர்பு கொள்ள முடி யும் என இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறி வித்துள்ளார். (நி-6)

# இடமாற்றம் வழங்க வலியுறுத்தி யாழில் அரச சாரதிகள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இடமாற்றத்தை வழங்க வலியுறுத்தி வடமாகாண அரச சாரதிகள் யாழில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டிருந் தனர்.

வடமாகாண ஆளுநர் அலு வலகத்திற்கு முன்பாக போராட் டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஆளுநருக்கான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை வடமாகாண ஆளுநரின் பிரதி நிதியிடம் கையளித்து இருந் தனர்.

தொடர்ந்து கைதடியில் ஆரம்பமான பேரணியானது வடமாகாண பிரதம செயலா ளரின் அலுவலகம் வரை சென்று குறித்த அலுவலகத் திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து வட மாகாண பிரதம செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது.


5 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்ற இட மாற்றம் வழங்கப்படுவதில்லை என குற்றம் சாட்டியுள்ள வட மாகாண அரச சாரதிகள் இட மாற்றத்தை வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரை மாகாணம் தழுவிய போராட்டத்தை முன்னெடுக்கப் படவுள்ளதாக தெிவித்தனர்.

மேலும் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் வழங்கப்பட் டால் போராட்டம் கைவிடப்படும் என் தெரிவித்தனர். (நி-6-30-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கிய வெல்லம்பிட்டிய



(கொழும்பு)

வெல்லம்பிட்டிய பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மெகொடா கொலன்னாவ, பிரெண்டியாவத்தை, சேதவத்தை, வேலேவத்தை மற்றும் ஜாரஸ் கார்டன் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பல குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பகுதிகளில் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை தினமான நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு பிரான்பற்றில் குறித்த சபையின் ஸ்தாபகர் முகராஜா தலைமையில் மார்க்கண்டு சுவாமிகள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்:அனுஷம்<br>கி.பா: 7 1/2<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்: A/L.கட்டிட ஒப்பந்தக்காரர்<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14571 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 26 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Bsc(Hons),Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant<br>தொ.இ: G/12804 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Diploma (Computer), Sales Officer<br>எதிர்பார்ப்பு: வேலை செய்யும் பெண்<br>தொ.இ: B/14573 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பரீட்சைப்பகுதிப் பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/12872 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, Sri Lankan Army<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14574 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 33<br>தகைமை/தொழில்: High Diploma in Library Science and Technology<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/13256 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 15<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.Com, DO<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் செய்யும் பெண்<br>தொ.இ: B/14577 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரீடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA.விவாகரத்து<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்/ வெளிநாடு<br>தொ.இ: G/14366 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்

திருச்செல்வம் இரவீந்திரன்
வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு. -வழக்காளி

வழக்கு இல : நாணாவிதம் /289 / 2024.

எதிர்

1. முருகேசு குகதாசன்-தலைவர்
 வற்றாப்பளை, முள்ளியவளை
2. ச.ஜெயபாலன் - உப தலைவர்,
 ஆலய பரிபாலன சபை.
 வற்றாப்பளை, முள்ளியவளை
3. த.காண்டீபன் - இணைச் செயலாளர்,
 ஆலய பரிபாலன சபை.
 கணுக்கேணி-கிழக்கு முள்ளியவளை
4. மயில்வாகனம் விக்கினேஸ்வரன்
 பொருளாளர்,
 ஆலய பரிபாலன சபை.
 வற்றாப்பளை, முள்ளியவளை
5. ம.கமலகாந்தன்
 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை
6. சு.கிருஸ்ணமூர்த்தி
 4 ஆம் வட்டார்ம், முள்ளியவளை
7. ம.சிவனேசமலர்
 வற்றாப்பளை, முள்ளியவளை
8. பொ.நல்லபிள்ளை
 4 ஆம் வட்டாரம், முள்ளியவளை
9. கு. விவேகானந்தராசா
 வற்றாப்பளை, முள்ளியவளை
10. க.அருளானந்தம்
 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை
11. வா.குணபாலன்
 குமுளமுனை, முள்ளியவளை
12. க.சின்னராசா
 வற்றாப்பளை, முள்ளியவளை
13. இ.உமாகரன்
 கேப்பாபிலவு, முள்ளியவளை
14. வை.கமலநாதன்
 சிலாவத்தை, முல்லைத்தீவு
15. சி.சஞ்சீவன்
 மாமூலை, முள்ளியவளை
16. க.பாலநாதன்
 குமுளமுனை, முள்ளியவளை
17. அ.கோபாலசிங்கம்
 உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு
18. சி.குருபரன்
 வற்றாப்பளை, முள்ளியவளை
19. மு.குகதாஸ்
 செம்மலை, அழம்பில்
20. ந.ஸ்ரீ இளம் சிங்கநாதன்
 3 ஆம் வட்டாரம் முள்ளியவளை,
21. வ.அச்சுதன்
 1 ஆம் வட்டாரம், முள்ளியவளை
22. க.கௌரிராணி
 4 ஆம் வட்டாரம், முள்ளியவளை
23. இ.தணிகாசலம்
 கள்ளப்பாடு, முல்லைத்தீவு
24. ச.மயில்வாகனம்
 கள்ளப்பாடு, முல்லைத்தீவு
25. கு.மகேந்திரன்
 தண்ணீரூற்று, முள்ளியவளை
26. வ.வசந்தராசா
 மாமூலை,முள்ளியவளை
27. கு.விஜயகுமார்
 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை
28. ப.செந்தூரன்.
 வெள்ளை முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு
29. செ.பாலகிருஸ்ணன்
 தண்ணீரூற்று, முள்ளியவளை
30. ஜெ.கோகுலராசா
 உற்றங்கரை, முள்ளியவளை

அனைவரும் ஆலய பரிபாலன சபை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம், வற்றாப்பளை, முல்லைத்தீவு.

- எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால் மேலே குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கெதிராக

i. கூட்டிணைக்கப்படாத வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில பரிபாலன சபையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் எதிராளிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து கொண்டு நடாத்த குடியியல் நடபடிமுறைக்கோவையின் 16 ஆம் பிரிவின் கீழ் அனுமதி வழங்குமாறும் குறித்த அனுமதியை இலங்கையில் பிரசுரிக்கப்படும் பத்திரிகை ஒன்றில் பிரசுரிப்பதற்கான கட்டளை.

ii. 03.03.2024 ஆம் திகதி நடத்தப்பட்ட வற்றாப்பிள்ளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபைக்கூட்டம் முறைகேடானது என பிரகடனப்படுத்தும் கட்டளையும் தீர்ப்பும்

iii. 03.03.2024 ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் வழக்காளியை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடு அல்லது தீர்மானம் வெற்றும் வெறிதானதும் என்றும் சட்டத்தின்பால் எவ்வித வலிதும் அற்றது என்றதுமான பிரகடனமும் தீர்ப்பும்.

iv. 03.03.2024 ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் வழக்காளிக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றும் வெறிதானதும் என்றும் சட்டத்தின்பால் எவ்வித வலிதும் அற்றது என்றதுமான பிரகடனமும் தீர்ப்பும்.

v. வழக்காளி தொடர்ந்தும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் 06.10.2023 ஆம் திகதி தொடக்கம் 05.10.2024 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான ஆலய பரிபாலன சபையின் செயலாளர் பதவியில் தொடர்ந்தும் இருக்கலாம் எனப் பிரகடனப்படுத்தும் கட்டளையும் தீர்ப்பும்.

vi. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் செயலாளர் பதவிக்கு 03.03.2024 ஆம் திகதி அன்று 5ம் எதிராளியை புதிய செயலாளராக நியமித்தமை வெற்றும் வெறிதானதும் என்றும் சட்டத்தின்பால் எவ்வித வலிதும் அற்றது என்றதுமான பிரகடனமும் தீர்ப்பும்.

vii. 03.03.2024 ஆம் திகதி அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் பதவியிலிருந்து வழக்காளி நீக்கப்பட்டதாக எடுக்கப்பட்டதான தீர்மானத்தினை நிறுத்தி வைக்கும் வகையில் 1 ஆம் எதிராளியையும் அவர் அங்கம் வகிக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினையும் கட்டுப்படுத்த ஓர் நிரந்தர தடைக்கட்டளையும்.

viii. 03.03.2024 ஆம் திகதி அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் பதவியிலிருந்து வழக்காளி நீக்கப்பட்டதாக எடுக்கப்பட்டதான தீர்மானத்தினை நிறுத்தி வைக்கும் வகையில் 1 ஆம் எதிராளியையும் அவர் அங்கம் வகிக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினையும் கட்டுப்படுத்த ஓர் இடைக்கால தடைக்கட்டளையும்.

ix. 03.03.2024 ஆம் திகதி அன்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் பதவியிலிருந்து வழக்காளி நீக்கப்பட்டதாக எடுக்கப்பட்டதான தீர்மானத்தினை நிறுத்தி வைக்கும் வகையில் 1 ஆம் எதிராளியையும் அவர் அங்கம் வகிக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினையும் கட்டுப்படுத்த ஓர் கட்டாணையும்.

x. 06.05.2024 இலிருந்து ஆரம்பமாகவுள்ள திருவிழாக் காலத்தில் வழக்காளி ஆலய பரிபாலன சபையில் செயலாளராக இருந்து தான் முன்னர் ஆற்றி வந்த ஆலயப் பணிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நிரந்தரக் கட்டளையும்.

xi. 06.05.2024 இலிருந்து ஆரம்பமாகவுள்ள திருவிழாக் காலத்தில் வழக்காளி ஆலய பரிபாலன சபையில் செயலாளராக இருந்து தான் முன்னர் ஆற்றி வந்த ஆலயப் பணிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடைக்கால தடைக்கட்டளையும்.

xii. 06.05.2024 இலிருந்து ஆரம்பமாகவுள்ள திருவிழாக் காலத்தில் வழக்காளி ஆலய பரிபாலன சபையில் செயலாளராக இருந்து தான் முன்னர் ஆற்றி வந்த ஆலயப் பணிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான கட்டாணையும்.

xiii. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் செயலாளர் பதவிக்குரிய பணிகளை 03.03.2024 ஆம் திகதி அன்று அப்பதவிக்கு புதிதாக நியமனம் பெற்றவர் 5ம் எதிராளி செயற்படுவதனை தடைசெய்யும் நிரந்தரக் கட்டளையும்.

xiv. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் செயலாளர் பதவிக்குரிய பணிகளை 03.03.2024 ஆம் திகதி அன்று அப்பதவிக்கு புதிதாக நியமனம் பெற்றவர் 5ம் எதிராளி செயற்படுவதனை தடைசெய்யும் இடைக்கால தடைக்கட்டளையும்.

xv. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் செயலாளர் பதவிக்குரிய பணிகளை 03.03.2024 ஆம் திகதி அன்று அப்பதவிக்கு புதிதாக நியமனம் பெற்றவர் 5ம் எதிராளி செயற்படுவதனை தடைசெய்யும் கட்டாணையும்.

ஆகிய கோரிக்கைகளை பிரதான நிவாரணங்களாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே கூட்டிணைக்கப்படாத வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய ஆலய பரிபாலன சபைக்கு எதிரான வழக்கில் குறித்த சபையில் அக்கறையுடையோர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது 10.06.2024 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டு 05 மாதம் 30 ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
PE
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
முல்லைத்தீவு
REGISTRAR
DISTRICT & MAGISTRATE'S COURT
MULLAITIVU

வரைபு :

S. Xnth
வழக்காளியின். சட்டத்தரணி

(1077)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

❖ தங்க அரண்மனை
❖ 7000 கார்கள்

## ஆடம்பரவாழ்வில் திளைக்கும் சுல்தான்





(பந்தர் செரி பெகவான்)

"புருனே" கடந்த 1967 ஆம் ஆண்டு தனி நாடாக உருவானது. இது உலகின் 5 ஆவது பணக்கார நாடாகும்.

இந்த நாட்டின் தலைநகர் பெயர் பந்தர் செரி பெகவான். இதுதான் பெரிய நகரமும் கூட. பெற்றோல் மற்றும் இயற்கை எரிவாயு மூலம் புருனேயில் செல்வம் கொழிக்கிறது.

இங்கு ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து 67 ஆயிரம் பீப்பாய் கச்சா எண்ணெயும், 25.3 மில்லியன் கன மீற்றர் திரவ எரிவாயும் உற்பத்தியாகிறது.

புருனே தனி நாடாக உருவான பின்னர் அந்நாட்டின் சுல்தானாக (மன்னராக) பொறுப்பேற்றவர் ஹசனல் போல்கியா முயுசுதீன் வாதுலா. அன்று முதல் தற்போது வரை 55 ஆண்டுகளாக அந்த பதவியில் நீடித்து வருகிறார். புருனே நாட்டின் மன்னர், பிரதமர், நிதி அமைச்சர், வெளியுறவு அமைச்சர், ராணுவ மந்திரி, ராணுவ தலைமை தளபதி, காவல் துறையின் தலைவர் எல்லாம் இவர்தான்.

ஹசனல் போல்கியா வசிக்கும் இஸ்தானா நூருல் இமான் அரண்மனை உலகில் உள்ள அரண்மனைகளிலேயே மிகப்பெரியது. "கின்னஸ் சாதனை" புத்தகத்தில் இந்த அரண்மனை இடம் பெற்றுள்ளது.

அரண்மனையின் மேற்கூரை முழுவதும் 22 கேரட் தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரண்மனையில் மொத்தமாக 1,788 அறைகள் உள்ளன. 275 ஆடம்பர குளியலறைகளும், 5 நீச்சல் குளங்களும் உள்ளன.

ஹஸனல் போக்கியாவின் அரண்மனையில் உள்ள கேரேஜில் 600 ரோல்ஸ்ராய்ஸ், 450 பெரானி, 380 பென்ட்லேஸ் உட்பட 7000 கார்கள் அணிவகுத்து நிற்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றின் மொத்த மதிப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர் இவரது ரோல்ஸ் ராய்ஸ் கார்களில் ஒன்று தங்கத்தால் இழைக்கப் பட்டது. புருனே சுல்தான் தனது சொந்த பயணத்துக்கென்றே தனியாக போயிங்-747, போயிங்-767, ஏர்பஸ்-ஏ340 என்று 3 பெரிய விமானங்கள் மற்றும் 6 சிறிய விமானங்களை வைத்திருக்கிறார்.

இதில் 545 கோடி ரூபாய் மதிப்புள்ள போயிங்-747 ரக விமானத்தை "பறக்கும் அரண்மனை" என்றே சொல்லலாம்.

புருனே மன்னரின் ஆடம்பர வாழ்க்கை குறித்து பேசுவது அந்த நாட்டில் சட்டப்படி குற்றம் ஆகும். இதனால் அது பற்றி மக்கள் யாரும் வாயே திறப்பது இல்லை.

மேலும் அங்கு மக்களும் வசதியா கவே இருப்பதால் எதையும் கண்டு கொள்வது இல்லை. புருனே மக்களுக்கும், அங்கு வசிக்கும் வெளிநாட்டினருக்கும் சுல்தானைப் பற்றி நல்ல அபிப்பிராயமே உள்ளது. அவர் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறார்கள். (நி-6)

## சுமார் 600 குப்பை
## மீண்டும் அனுப்பிய

(பியாங்யாங்) ——

**பலூன் மூலம் தென்கொரியாவிற்குள் வட கொரியா மீண்டும் குப்பைகளை வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

தனது எதிரி நாடுகளாகக் கருதும் தென்கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரிக்கையும் விடுத்து வருகின்றது.

கொரிய தீபகற்பத்தில் வட கொரியா - தென்கொரியா நாடுகளுக்கு இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகின்ற நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் பலூன் மூலம் தென் கொரியாவிற்குள் வடகொரியா குப்பைகளை வீசியிருந்தது.

சிகரெட் துண்டுகள், வெற்று காகிதங்கள்,கிழிந்த துணிகள், பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற குப்பைகள் அடங்கிய பலூன்களை தென்கொரியாவிற்குள் வட கொரியா பறக்க விட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தென்கொரியாவிற்குள் மீண்டும் குப்பைகளைக் கொண்ட பலூன்களை வட கொரியா அனுப்பியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை

## ஐஸ்லாந்தின் ஜனாதிபதியாக ஹல்லா தோமஸ் தெரிவு

(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்தின் புதிய ஜனாதிபதியாக ஹல்லா தோமஸ் டோட்டிர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தொழிலதிபரான ஹல்லா தோமஸ் டோட்டிர் மற்றும் முன்னாள் பிரதமர் கேத்ரின் ஜாகோப்ஸ் டோட்டிர் ஆகியோருக்கு இடையில் பலத்த போட்டி நிலவியது.

இந்நிலையில் 34.6 சதவீத வாக்குகளைப் பெற்று. நாட்டின் இரண்டாவது பெண் ஜனாதிபதியாக 55 வயதான ஹல்லா தோமஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அவரை எதிர்த்துப் போட்டியிட்ட , 48 வயதான கட்ரின் ஜோகோப்ஸ் டோட்டிர் 25.5 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

கடந்த 1980 ஆம் ஆண்டு "விக்டீஸ் பின்னபோகா டோட்டிர்" என்பவர் ஐஸ்லாந்தின் முதல் பெண் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



## ஜேர்மனியில் கன
## அவசரநிலை பிரக



## பறவைக் கா
### 42 லட்சம் கோழி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெஸ் மோனெஸ்ஸில் கோழிப் பண்ணையில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டதை தொடர்ந்து 42 லட்சம் கோழிகளைக் அழிக்க அமெரிக்க விவசாயத் துறை உத்தரவிட்டுள்ளது.

அதாவது அயோவாவின் சியோக்ஸ் கவுண்டியில் உள்ள கோழிப் பண்ணை

யில்
கண்
42
அழி
பண்
ஈடுப

மி
ணம்
ஸ்
கோழ்
வாரப
வை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...பை பலூன்களை ...பியது வடகொரியா

வட...
...வம்


...தள் ...வட ...ட சம்பவம் ...ஏற்படுத்தி ...ன்கொரியா ...பைகளைக் ...களை வட ...ளதாக சர்வ ...வல் வெளி ...னம் இரவு ...லை வரை



தென்கொரியாவிற்குள் 600 இற்கும் மேற்பட்ட குப்பை பலூன் களை வடகொரியா அனுப் பியுள்ளது.

வடகொரியாவிற்கு எதி ரான வாசகங்களுடன் தென் கொரியாவில் இருந்து வீசப் பட்ட காகிதங்களுக்கு பதில டியாக இந்த பலூன்கள் வீசப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஏலத்திற்கு வரவுள்ள டயானாவின் கடிதங்கள்



(லண்டன்)

பிரித்தானியாவின் மறைந்த இளவரசி டயானா வின் வாழ்க்கையை வெளிப் படுத்தும் கடிதங்கள் ஏலத் திற்கு வரவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இளவரசி டயானாவின் முன்னாள் வீட்டு பணி யாளர் மௌட் பெண்ட்ரே அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் மற்றும் விடு முறை வாழ்த்து அட்டைகள் என்பனவே இவ்வாறு ஏலத் திற்கு வரவுள்ளதாக கூறப் படுகிறது.

1981 ஆம் ஆண்டு இள வரசர் சார்ளை மணந்த பிறகு அவர்கள் எழுதிக் கொண்ட கடிதங்கள் இதில் அடங்குவதோடு, 1981 முதல் 1985 வரையிலான 14 கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு அட்டைகளும், பல உணர்வு பூர்வமான கடிதங்களும் இந்த ஏலத் திற்கு வைக்கப்பட்டுள் ளன.

பெவர்லி ஹில்ஸில் உள்ள ஜூலியன்ஸ் ஏல நிறுவனத்தால் இந்த ஏலம் நடத்தப்படவுள்ளது. இதன் மதிப்பு இலட்சக்கணக்கான டொலர்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கையால் எழுதப் பட்ட செய்திகள் இளவரசி டயானாவின் தனிப்பட்ட வாழ்க்கையின் சிறந்த தரு ணங்கள் மற்றும் மைல் கற்களை வெளிப்படுத்து கின்றன. (நி-6)

## ...ல் கனமழை ...ம பிரகடனம்



(பேர்லின்)

ஜேர்மனியில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில் இருந்து சுமார் 1,300 பேர் வெளியேற்றப்பட்டு உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

அதன்படி ஜேர்மனியின் பவேரியா, படேன் வர்ட்டம் பேர்க் மாகாணங்களில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங் குள்ள டோனாவ், நெக்கர், குயென்ஸ் உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன

இதன் காரணமாக சில ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் அங்குள்ள 10 மாவட்ட ங்களுக்கு அவசர நிலை விடுக்கப்பட்டு உள் ளது.

எனவே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில் இருந்து சுமார் 1,300 பேர் வெளியேற்றப்பட்டு உள்ளதுடன் இதற்காக அங்கு பல தற்காலிக நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (நி-6)

## அமைதி உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள தடைவிதிக்கும் சீனா

### ஜெலென்ஸ்கி குற்றச்சாட்டு



(ஜெனீவா)

இந்த மாத இறுதியில் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் அமைதி உச்சி மாநாட்டில் பங்கேற் பதில் இருந்து மற்ற நாடுகளை சீனா தடுக்கிறது என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசியாவின் மிகப் பெரிய பாதுகாப்பு மாநாட்டில், ஷங்ரி-லா உரையாடலில் பேசிய உக்ரைன் ஜனா திபதி , ஆசிய-பசுபிக் நாடுகளிடையே ஆதரவைத்திரட்ட முயன்றார்.

“உலகம் நெகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும், அது வலுவாக இருக்க வேண்டும், ரஷ்யாவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்” என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

மேலும் சுவிஸ் கூட்டத்தில் பங்கேற்குமாறு வலியுறுத்தி னார்.சில உலகத் தலைவர்கள் வருகையை இன்னும் உறு திப்படுத்தாததால் தான் “ஏமாற்றம்” அடைந்ததாக ஜெலெ ன்ஸ்கி கூறினார்.உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று நாடு களை எச்சரிப்பத் தன் மூலம் ரஷ்யா உச்சிமாநாட்டைக் குறை மதிப்பிற்கு உட்படுத்த முற்படுகிறது மற்றும் விவசாய பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை முற்றுகையிட அச்சுறுத்துகிறது என்று அவர் கூறினார். (நி-6)

## ...க காய்ச்சல் எதிரொலி ...கோழிகளை அழிக்க உத்தரவு

...யில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டதையடுத்து 42 லட்சம் கோழிகளை அழிக்கும் பணியில் பண்ணை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மின்னசோட்டா மாகா ணம் மின்னேபோ லிஸ் ஸுக்கு வடக்கே உள்ள கோழிப் பண்ணையில் கடந்த வாரம் பறவைக் காய்ச்சல் வைரஸ் கண்டறியப்பட்டதில் ஏற்கனவே 14 லட்சம் கோழி கள் கொல்லப்பட்டன.

கடந்த 2022 ஆம் ஆண்டில் இருந்து மட்டும் இதுவரை 9 கோடியே 20 லட்சம் கோழிகள் கொல்லப் பட்டுள்ளதாக அமெரிக்க விவ சாயத்துறை தெரிவித்து ள்ளது.இந்த நோய்த் தொற்று கறவை மாடுகளையும் தாக் குவது கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி இந்திய கடவுச்சீட்டுகளை தயாரித்த இலங்கையர்கள் கைது

(டில்லி)

இந்திய கடவுச்சீட்டுகளை சட்ட விரோதமான முறையில் தயாரித்த இரண்டு இலங்கையர்கள் உட்பட மூவரை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இலங்கை அகதிகளுக்கான இந்திய கடவுச்சீட்டுகளை தயாரித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபர்களை தமிழகத்தில் வைத்து கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரண்டு இலங்கையர்களுடன் இந்திய பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் கடவுச்சீட்டுகளை வழங்கியவர் என சந்தேகிக்கப்படுகிறது.

21 இலங்கையர்களுக்கு இந்திய கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த மோசடி தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அதன்படி, மோசடி தொடர்பாக 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-6)

# மொட்டு கட்சி எம்.பியும் ஐ.ம.ச வில் இணைவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி திலக் ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

திலக் ராஜபக்ஷ தனது உயர் கல்வியின் பின்னர் இலங்கை இராணுவ மருத்துவப் பிரிவில் கடமையாற்றியுள்ளார். அம்பகவெல்ல பிராந்திய வைத்தியசாலை மற்றும் அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தலைவராகவும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 400 | 450 | 350-450 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 230 | 250 | 250 |
| தக்காளி | 180 | 260 | 250 | 150 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 140 | 120 | 200 |
| கோவா | 300 | 220 | 250 | 200 | 250 |
| கரட் | 250 | 280 | 260 | 250 | 300 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 140 | 200 | 200 | 120 | 320 |
| வாழைக்காய் | 100 | 130 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 200-400 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 260 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 700 | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 180 | 230 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200-300 | 250 |
| லீக்ஸ் | 500 | 480 | 480 | 350 | 500 |
| பீற்றூட் | 450 | 400 | 530 | 300 | 500 |
| கறிமிளகாய் | 550 | 500 | 550 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 500 | 400-650 | 800 |
| போஞ்சி | 800 | 900 | 800 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | -- | -- | 420 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 80-100 | 120-140 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 800-1000 | 800-900 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 60-120 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 550 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 400 | 180 | 80 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 130 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 90 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | -- | 80 | -- |

# இன்று ஒரு தகவல் 144


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புளியின் மகத்துவம்

"அந்த நபரைக் கண்டாலே போதும் எனக்கு வயிற்றிலே புளியைக் கரைத்தது போல் ஆகிவிடும்" என்று சொல்வது உண்டு. "இதோ இருக்கிறாரே இவர் வந்து அந்த செய்தியை கூறிய பின் தான் என் வயிற்றிலே பாலை வார்த்தது போல் இருந்தது" இப்படி கூறுவதும் உண்டு.

வாளியிலே புளியை கரைப்பது என்றால் சரி! வயிற்றிலே புளியை கரைக்கிறது என்றால் அது எப்படி? "மிகவும் பய முறுத்திவிட்டார்" என்று சொல்வதற்குப் பதிலாக இப்படி சொல்வார்கள்.

அது சரி புளி என்ன அவ்வளவு மோசமான ஒன்றா? "புளி ருசிக்காகத் தான் ஆகாரத்திலே சேர்க்கின்றோம். மற்றப்படி வேறு எந்த நன்மையும் அதிலே இல்லை" என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தாப்பு.

அதற்காகத்தான் இன்றைக்கு இந்தத் தகவல் நேரத்தைப் புளிக்காக ஒதுக்கலாம் என்று ஒரு யோசனை.

100 கிராம் புளியிலே பல்ப் 283 கலோரி சத்து இருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படி இருக்கும் போது அதைப் பற்றி பேசாமல் இருக்க முடியுமா? புளிய மரத்திற்கு பூர்வீகம் ஆபிரிக்காவாக இருந்தாலும் இப்போது தான் நமது ஊரிலேயே அது தாராளமாக குடியிருக்கிறது.

சில மருந்து சாப்பிடும் போது புளி சேர்க்கக் கூடாது என்று பத்தியம் சொல்வது உண்டு. ஆனால் புளியே ஒரு நல்ல மருந்து. தாகத்தைத் தணிக்க, பசியைத் தூண்ட, வீக்கத்தைக் குறைக்க இப்படி எல்லாவற்றிற்கும் இதை உபயோகப்படுத்தலாம். சுத்தமான நீரிலே சிறிதளவு புளியைக் கரைத்து அதிலே ஒரு ஆறு தேக்கரண்டி காலையிலே சாப்பிடுங்கள். அது பசியை அதிகப்படுத்தும்.

உடலிலே எங்கேயாவது வீக்கம், வலி இருக்கிறதா? புளிச் சாறு, உப்பு இது இரண்டையும் கலந்து தேய்த்து விடுங்கள். தினமும் இரண்டு தடவை இப்படி செய்தால் போதும். வெறும் புளியம்பழத்தை சாப்பிட்டால் ஈறிலே இரத்தம் வருவது நின்று போய்விடும். சாப்பிட்ட பின் ஒரு மணி நேரம் கழித்து நன்றாக பழுத்த புளி ஒன்றை சாப்பிடுங்கள்.

ஜீரணக் கோளாறா? பசியின்மையா? அதற்கும் ஒரு புளி வைத்தியம் இருக்கிறது. என்ன தெரியுமா? நன்றாக கொதித்து ஆறிய பாலை எடுத்து அதிலே 4 அல்லது 5 சொட்டு புளிச்சாறு விட வேண்டும். இப்படி விட்டால் என்ன ஆகும் தெரியுமா? பால் பிரிந்து அடியலே தங்கிவிடும். மேலே தண்ணீராக ஒரு திரவம் நிக்கும். அதை எடுத்து தினம் மூன்று தடவை சாப்பிட வேண்டும். இது வெறும் தண்ணீர் இல்லை. பாலிலே இருக்கின்ற அத்தனை புரோற்றீனும் இந்தத் திரவத்திலே இருக்கின்றது. இது சுலபமாக செமித்துவிடும். Very light food இது.

தென்னிந்தியாவிலே இருப்பவர்களுக்கு மாரடைப்பு வருவது, சிறுநீரகக் கோளாறுகள் இது எல்லாம் குறைவாக உள்ளது என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். ஏன்? சாம்பார், ரசத்திலே புளியை தொடர்ந்து உபயோகப்படுத்துகின்றார்கள் அல்லவா அதனால் தான்.

புளி விதைகளை தூளாக்கி வைத்துக் கொள்ளலாம். அதிலும் நிறைய் மருத்துவக் குணம் உண்டு. இந்தத் தூளிலே ஒரு மேசைக்கரண்டி எடுத்து நீரிலே கலந்து தினம் மூன்று வேளை சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நிற்கும். 1/2 தேக்கரண்டி புளித்தூள், சம அளவு தேன் இது இரண்டையும் கலந்து தினம் இரண்டு வேளை சாப்பிட்டால் இரத்தப் போக்கை நிறுத்தி விடும்.

ஒரு மேசைக்கரண்டி புளித்தூள், நீர், ருசிக்காக சிறிதளவு சர்க்கரை இதைக் கலந்து தினம் ஒரு வேளை இரவு சாப்பாட்டுக்கு முன் இரண்டு வாரத்திற்கு சாப்பிடலாம். இது சக்தி விரயத்தை தடுக்கும்.

புளியங்கொழுந்தில் கறி செய்யலாம். இதிலே விற்றமின் ஏ, சி, இரும்புச்சத்து எல்லாம் இருக்கிறது. புளிய மரப் பட்டையை சுட்டு கரியாக்கி அதைத் தூளாக்கி எண்ணெயிலே குழைத்து தீப்புண்ணிற்குத் தடவலாம். விஷம் குடித்தவர்களுக்கு அடர்த்தியான புளிச்சாறு திரும்பத் திரும்பக் கொடுத்து வாந்தி எடுக்க வைக்கலாம். 10 மில்லி நீரிலே 6 கிராம் பழுத்த புளியை இரண்டு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். இதை எடுத்து 4 மணி நேரத்திற்கு கொடுத்தால் வாந்தியை நிறுத்திவிடும். ஆனால் ஒன்று இந்தக் கரைசலை ஒவ்வொரு தடவையும் புதிதாக தயார் செய்ய வேண்டும்.

புளிச்சாறு,கிராம்பு, இலவங்கப்பட்டை இவை மூன்றையும் நீரிலே கரைத்துக் குடித்தால் உணவுப் பாதையிலே உள்ள அழற்சிகளை சரி செய்யும். 25 கிராம் புளியை 120 மில்லி நீரிலே ஒரு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் 6 கிராம் சீனி சேர்க்க வேண்டும். இது எதற்கு மருந்து தெரியுமா? Giddiness- தலை லேசாக இருப்பது unsteady ஆக இருப்பது இவற்றிற்கு இது நல்ல மருந்து. மற்றவற்றை மறந்தாலும் இதை மட்டுமாவது ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். Giddiness மருந்து. ஏன் என்றால் இன்று ஒரு தகவல் தொடர்ந்து கேட்டுக்கொண்டு வரும் நேயர்களுக்கு ஒவ்வொரு சமயம் இது அவசியம் தேவைப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் வழங்கல் நிறுத்தம் நெருக்கடியில் மக்கள்

(அக்கராயன்)

ஒரு மாதத்திற்கு மேலாக குடிநீர் வழங்கப்படாததன் காரணமாக பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் நெருக்கடி எதிர்கொள்கின்ற கிராமங்களில் ஒன்றாக அக்கராயன் காணப்பட்ட நிலையில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் குடிநீர் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு குடிநீரினை பெற்று வந்த நிலையில் தற்போது ஒரு மாத காலமாக குறித்த குடிநீர் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த குடிநீர் திட்டத்தின் மூலம் அக்கராயன் மத்தி, மேற்கு, கெங்காதரன் குடியிருப்புக்களை சேர்ந்த மக்கள் குடிநீரினை பெற்று வந்தனர். இந்நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ள குடிநீரினை தொடர்ந்து வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# முச்சக்கர வண்டிகளில் அவசர பொலிஸ் இலக்கங்கள்



(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள முச்சக்கர வண்டிகளில் யுக்திய மற்றும் பொலிஸ் அவசர இலக்கங்கள் நேற்று முன்தினம் பொறிக்கப்பட்டன.

வவுனியாவில் பதிவில் உள்ள முச்சக்கர வண்டிகள் மற்றும் தனியார் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகள் அனைத்தும் இந்த செயற்பாட்டுக்காக பொலிஸ் மைதானத்திற்கு அழைக்கப்பட்டு வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகரவின் ஆலோசனைக்கமைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலிக் பெரேரா வழிநடத்தலில் உதவி பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.ஜெயகொடியின் தலைமையில் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யு. எம்.ரி.பி. வாசலவின் அணியினர் குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். (நி-6-250)

# போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்ட செயலமர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டத்தினை வலுவூட்டும் வகையில் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் செயலமர்வு இரு நாட்கள் மாவட்ட செயலக திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலக கிறிஸ்தவ கலாசார பிரிவின் ஏற்பாட்டில் RAHAMA நிறுவனத்தின் நிதி அனுசரனையில் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 40 இளையோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் இந்து கலாசார உத்தியோகத்தர்கள், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், போதை ஒழிப்பு சார்ந்த பணியாற்றும் உத்தியோகத்தர்கள், எனப் பலரும் கலந்துகொண்டனர்.

உலகம் முழுதும் ஜூன் 26ஆம் நாள் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3135

### சுபாசினி

மனசு சரியில்லை என்று தான் கோயிலுக்கு போறோம்



அங்கேயும் சர்க்கரை பொங்கல் கிடைக்கவில்லை என்றால் அப்புறம் என்ன வாழ்க்கை இது

### சஞ்சய்

உங்க பொண்ணு கிளி மாதிரி என்று சொல்லி எனக்கு கட்டி வைச்சீங்கள் இப்போ அரிவாள் எடுத்து வெட்ட வாறாள்



இது "வெட்டுக்கிளி" மாப்பிள்ளை அப்படித்தான் இருக்கும்

### லோஜினி

காதல் வளர்த்தேன் காதல் வளர்த்தேன் உன் மேல் நானும் புள்ள காதல் வளர்த்தேன்




காதல் வளர்த்ததுக்கு பதிலா ஆடு மாடு வளர்த்திருந்தால் நாலு காசாவது பார்த்திருக்கலாம்

### டிபிஷன்

ரஷ்ய ஏவுகணைகள் போல உன் கண்கள் நடத்தும் தாக்குதலால்... உக்ரைன் கட்டடங்கள் போல என் இதயம் சரிகிறது




அப்படியா அந்த ஆளு வரட்டும் இன்றைக்கு


### நர்மதா

தொட்டிக்கட்டைக்கு கணக்கு தெரியுமா? தெரியாது... அப்புறம் எப்படி கூட்டுது பெருக்குது?



### சூர்யா

நான் ஓபிஸில கஷ்டப்பட்டு வேலை பார்ப்பன் அப்பவெல்லாம் மெதுவா சுத்திவிட்டு



லீவு போட்டு ரெஸ்ட் எடுக்கும் போது வேகமாக சுத்துறியே உனக்கு வெக்கமாக இல்லை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 498





ஆனால் எங்கே உதயமாகியிருக்கிறது என்று பார்க்க முடியவில்லை. இளவரசர் அவனை அன்புடன் நோக்கி, "தோழா! சமீபத்தில் எங்கேயோ கரை இருக்க வேண்டும். தென்னை மரம் ஒன்றின் உச்சியைச் சற்று முன் பார்த்தேன். இன்னும் கொஞ்சம் பொறுமையாயிரு!" என்று சொன்னார்.

"இளவரசே! என்னைக் கைவிட்டுவிடுங்கள்! தாங்கள் எப்படியாவது தப்பிப் பிழையுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"வேண்டாம்! அதைரியப் படாதே! உன்னை அப்படி நான் விட்டுவிடமாட்டேன்! ஆகா! அது என்ன! யாரோ பாடுகிற குரல்போல் தொனிக்கிறதே!" என்றார் இளவரசர். ஆம் அப்போது அவர்களுடைய காதில் பூங்குழலி படகிலிருந்து பாடிய பாட்டுத்தான் கேட்டது.

அலைகடல் கொந்தளிக்கையிலே அகக்கடல்தான் களிப்பதுமேன்?

என்ற கீதம் அவர்களுடைய காதில் அபய கீதமாகத் தொனித்தது. உடற்சோர்வும் மனச்சோர்வும் உற்று, முக்கால் பிராணனை இழந்திருந்த வந்தியத்தேவனுக்குக்கூட அந்தக் கீதம் புத்துயிர் அளித்து உற்சாகம் ஊட்டியது.

இளவரசே! பூங்குழலியின் குரல்தான் அது! படகு ஓட்டிக்கொண்டு வருகிறாள். நாம் பிழைத்துப் போனோம்! என்று சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் படகு அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. நெருங்கி நெருங்கி அருகில் வந்தது. பூங்குழலி, இது உண்மையில் நடப்பதுதானா? என்று சந்தேகித்துச் செயலிழந்து நின்றாள். இளவரசர், வந்தியத்தேவனைக் கட்டு அவிழ்த்து விட்டார். முதலில் தாம் படகிலே தாவி ஏறிக்கொண்டார். பின்னர் வந்தியத்தேவனையும் ஏற்றி விட்டார். பூங்குழலி கையில் பிடித்த துடுப்புடனே சித்திரப் பாவையைப் போல் செயலற்று நின்றாள்

### பாகம் - 3
### முதலாம் அத்தியாயம்கோடிக்கரையில்

கடலில் அடித்த சுழிக்காற்றுச் சோழ நாட்டுக் கடற்கரையோரத்தில் புகுந்து, தன் துரிதப் பிரயாணத்தைச் செய்து கொண்டு போயிற்று. "கல்லுளிமங்கன் போன வழி, காடு மலையெல்லாம் தவிடுபொடி" என்பது போல, அந்தச் சுழிக்காற்றுப் போன வழியெங்கும் பற்பல பயங்கர நாசவேலைகளைக் காணும்படி இருந்தது. கோடிக்கரையிலிருந்து காவேரிப் பூம்பட்டினம் வரையில் சோழ நாட்டுக் கடற்கரையோரங்களில் வாயு பகவானின் லீலை செய்த வேலைகளை நன்கு பார்க்கும் படியிருந்தது. எத்தனையோ மரங்கள் வேரோடு பெயர்ந்தும், கிளைகள் முறிந்தும் கிடந்தன. வீடுகளின் கூரைகளைச் சுழிக்காற்று அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு போய்த் தூர தூரங்களில் தூள் தூளாக்கி எறிந்து விட்டிருந்தது. குடிசைகள் குட்டிச் சுவர்களாயிருந்தன. கோடிக்கரைப் பகுதியில் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடாயிருந்தது. கடல் பொங்கி வந்து பூமிக்குள் புகுந்து விட்டதோ என்று தோன்றியது. ஆனால் பூமிக்கும் கடலுக்கும் மத்தியில் இருந்த வெண்மணல் பிரதேசம் அந்தக் கொள்கையைப் பொய்ப்படுத்தியது. அந்த வெண்மணல் பிரதேசத்தில் ஆங்காங்குப் புதைசேறு இருந்த இடங்களில் மட்டும் இப்போது அதிகமாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. அப்படிப்பட்ட இடங்களில் இப்போது மனிதனோ மிருகமோ இறங்கி விட்டால் உயிரோடு சமாதிதான்! யானைகளைக் கூட அப்புதை சேற்றுக் குழிகள் இப்போது விழுங்கி ஏப்பம் விட்டு விடும்!

சுழிக்காற்று அடித்த இரண்டு நாளைக்குப் பிறகு கோடிக்கரைக்குப் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய பரிவாரங்களும் வந்து சேர்ந்தார்கள். பல்லக்கும் பின் தொடர்ந்து வந்தது. ஆனால் இம்முறை அந்தப் பல்லக்கில் அமர்ந்து இளையராணி நந்தினிதேவியே பிரயாணம் செய்தாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முட்டாளை மணந்த இளவரசி

(நேற்றைய தொடர்ச்சி...)

நீண்ட தூரம் நடந்தான் அவன். இறந்து போன கோழி ஒன்று வழியில் கிடந்தது. இது எதற்காவது பயன் படும் என்று நினைத்தான் அவன், தன் தோளில் கிடந்த சாக்குப் பைக்குள் அந்தக் கோழியைப் போட்டான்.

இன்னும் சிறிது தூரம் நடந்தான். வழியில் கிடந்த சிறு தொட்டியில் அவன் கால் இடறியது.

அந்தத் தொட்டியையும் எடுத்து சாக்குப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

வழியில் மாடு



ஆடுகளைக் கட்டும் தடி ஒன்று கிடந்தது. குதிரையின் கால் குளம்பு கிடந்தது. பல வளைவுகளை உடைய ஆட்டின் கொம்பு ஒன்று கிடந்தது. எல்லாவற்றையும் எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

சாக்குப் பையைத் தூக்கிக்கொண்டு மெல்ல நடந்து அரண்மனையை அடைந்தான் அவன்.

காவலுக்கு இருந்த வீரர்கள் கந்தல் ஆடையுடன் காட்சி அளித்த அவனைக் கண்டு சிரித்தனர்.

இளவரசியுடன் போட்டியிட வந்துள்ளேன். என்னை உள்ளே விடுங்கள் என்றான் அவன்.

பிச்சைக்காரனாகிய உனக்கு என்ன தெரியும்? நீயா இளவரசியுடன் போட்டியிடப் போகிறாய் என்று கேலியாகக் கேட்டான் வீரன் ஒருவன்.

என் மூக்குக்குக் கீழே வாய் உள்ளது. வாய்க்கு உள்ளே நாக்கு உள்ளது. என் திறமையான பேச்சினால் இளவரசியை வெல்வேன், என்றான் அவன்.

உம்மைப் போன்ற முட்டாளிடம் இளவரசி பேச மாட்டார். நீ திரும்பிச் சென்று நல்ல அறிவு பெற்று மீண்டும் இங்கே வா என்றான் இன்னொரு வீரன்.

நான் இங்கிருந்து நகர மாட்டேன், போட்டியிட வந்திருக்கிறேன். இளவரசியிடம் சொல் என்று உறுதி யுடன் சொன்னான் அவன்.

வீரர்கள் இளவரசியிடம் சென்றார்கள். பிச்சைக்கார இளைஞன் ஒருவன் போட்டிக்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். விளையாடுவதற்காக அந்த முட்டாள் இங்கு வந்திருக்கிறான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப் பிடிவாதத்துக்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை, அதனால் உணர முடியாது.
– ஒகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் சாசனத்தை இயற்றியது யார் கொலோ!

அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குண்டு.

அதிலிருந்து அரசாங்கம் விலகுமாயின் அஃது அரசியல் சாசனத்தை மீறிய குற்றச் செயலாகும். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தவிர, பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை மாற்ற வேண்டுமாயின், அரசியல் யாப்பையே மாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதை யாராலும் தடுக்க முடியாது. அந்த முன்னுரிமையை அரசாங்கம் வழங்கிக் கொண்டுதான் இருக்கும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிப்பதே ஜனாதிபதி ரணிலின் நோக்கம் என்பது அவரின் மேற்போந்த கருத்தில் இருந்து புரிதற்குரியது.

புத்தபகவான் பூரண துறவை மேற்கொண்டவர். பற்றற்ற வாழ்வின் மூலம் பரிநிர்வாணம் அடைந்தவர்.

கௌதம புத்தபிரான் ஒருபோதும் தனது தத்துவத்தை முதன்மைப்படுத்துமாறு கூறிலர்.

மாறாக, அவரின் போதனைகள் எவர்க்கும் தீங்கில்லாதவை. எவரையும் துன்பப்படுத்தாதவை. மனிதப் பிறப்பின் மகத்துவத்தை புரிய வைப்பவை.

அப்படியானால், மூவின மக்கள் மற்றும் பௌத்தம் உட்பட நான்கு மதங்கள் உள்ள இலங்கைத் திருநாட்டில், பௌத்தத்துக்கு மட்டும் அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற அரசியல் யாப்பை யார் கொண்டு வந்தது என்பதுதான் நம் கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையின்படி; இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசியல் சாசனம் கூறுகிறது எனும்போது, அரசியல் சாசனம் ஏதோ தேவலோகத்தில் இருந்து கொண்டு வரப்பட்டது போலவும் அதனை மீற முடியாதென்பது போலவும் அவரின் கருத்து அமைகிறது.

இலங்கையில் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பது மதவாதத்தின் அடிப்படையாக உள்ளதென்பதுதான் உண்மை.

அதாவது இலங்கையின் ஆதிச்சமயம் சைவம். இலங்கை மண்ணை ஆட்சி செய்தவன் சிவபக்தனாகிய இலங்கை வேந்தன் இராவணன்.

அப்படியாயின், இலங்கையின் ஆதிச்சமயமாகிய சைவ சமயத்துக்கே அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும்.

ஆனால் இந்த நாட்டில் ஆட்சியாளர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்ற சமயமாக சைவம் உள்ளது.

பரவாயில்லை. பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதை மாற்றுவதாயின், அரசியலமைப்பையே மாற்ற வேண்டும் என கூறுகின்ற ஜனாதிபதி ரணிலிடம் நாம் கேட்பது;

ஏனைய சமயங்களுக்கும் அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டுமென, அரசியல் யாப்பில் உள்ளடக்கினால் என்ன என்பதுதான்.

ஆக, மதமேலாதிக்கத்தை அரசியல் யாப்பின் மூலம் உறுதி செய்துவிட்டு, இப்போது அரசியலமைப்பை சுட்டிக்காட்டி தங்களில் தவறில்லை எனக் கூறுவதுதான் மிகப்பெரும் அபத்தம்.

# திருட்டு, ஊழல், இலஞ்சம், மோசடியை பாதுகாக்கும் அரசே நாட்டை ஆள்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

திருட்டு, ஊழல், இலஞ்சம், மோசடி போன்றவற்றைப் பாதுகாக்கும் அரசாங்கமே தற்போது நாட்டை ஆள்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 218 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாறை, தெஹியத்தகண்டிய, சந்துன்புர தேசிய பாடசாலைக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு தற்போது வங்குரோத்தடைந்ததொரு நாடாகும். இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு வெளிப்படையான, நேர்மையான மற்றும் திருட்டு இல்லாத திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். என்றாலும் அவ்வாறானதொரு எந்தத் திட்டமும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை.

பக்டீரியா தொற்றுகளைத் தடுக்கும் Meropenem என்ற தடுப்பூசி 2022 நவம்பரில் நாட்டில் கையிருப்பில் இல்லை எனக் கூறி, அவசர கொள்முதல் முறையின் மூலம் 450,000 தடுப்பூசி குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டது.

இதன் மூலம் நாட்டுக்கு முப்பத்தாறு கோடி எண்பத்தி ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூறுகிறது. இது நாட்டின் வளங்களைப் பட்டப்பகலில் திருடும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

488590 தடுப்பூசிகள் அன்று கையிருப்பில் இருந்தன. ஒரு குப்பியும் இல்லை என கூறி, அவசர கொள்முதல் மூலம் தான் இந்தப் புதிய பங்கு பெறப்பட்டுள்ளது. ஒரு குப்பி ரூ.1075க்கு கிடைத்தும், ரூ.1895க்கு இது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விவசாயம், வியாபாரம் மற்றும் தொழில் முயற்சியாண்மைகள் வீழ்ச்சியடைந்துள்ள வங்குரோத்தான நாட்டில் கூட தடுப்பூசி குப்பிகளில் இருந்து கமிஷன் பெற்றுள்ளனர்.

இந்த ஊழல் செயற்பாட்டை முன்னெடுத்த முன்னாள் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்தது. இதில் அவரைப் பாதுகாக்க 113 பேர் கைகோர்த்திருந்தனர். அவர்கள் தவறான விடயத்துக்கு கைகளை உயர்த்தி, ஆதரித்து திருட்டு, இலஞ்சம், ஊழல் ஆகியவற்றைப் பாதுகாத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்தத் தடுப்பூசிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அதிகப்படியான நிதியை ஸ்மார்ட் வகுப்பறைகளை திறந்து வைக்கப் பயன்படுத்தியிருக்காலம். ஏமாற்றும் பொய்யுமே நாட்டில் 24 மணிநேரமும் நடந்து வருகிறது. 220 இலட்சம் மக்களும் முட்டாள்கள் என்றே ஆட்சியாளர்கள் கணக்கிட்டு நடந்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

(ம-7,10)

## உயர்தரப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதைத் தவிர்க்கவும்

(கொழும்பு)

உயர்கல்விப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதைத் தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க,

பல மாணவர்கள் தங்கள் பரீட்சை முடிவுகளை முகநூலில் பதிவிடுவதைப் பார்க்கிறோம். அதை செய்யக் கூடாது. அந்தப் பரீட்சை எண்ணில் இருந்து வேறு ஒருவரின் விண்ணப்பம் அல்லது தேசிய அடையாள அட்டையின் எண் யாருக்காவது தெரிந்தால், அந்த விண்ணப்பத்தை நிரப்பினால், கேள்விக்குரிய மாணவருக்கு அதை மீண்டும் நிரப்ப இரண்டாவது வாய்ப்புக் கிடைக்காது. அது நடந்தால், நீண்ட காலத்திற்குப் பிறகு, முழு கணினி செயல்முறையையும் மாற்றிய பின்னரே சட்டப்பூர்வ உரிமையாளரால் இந்த அணுகலைப் பெற முடியும் அப்படி நடந்தால், அந்த மாணவர்களை ஆணைக்குழு பார்த்துக் கொள்ளும். பயப்பட வேண்டாம். ஆனால் தயவு செய்து உங்களது பரீட்சை எண்ணை பேஸ்புக் அல்லது சமூக ஊடகங்களில் வெளியிடுவதைத் தவிர்க்கவும் என்றார்.

(ம-7,10)

## தோட்டத் தொழிலாளர் சம்பளம் நீதிமன்ற அதிரடி உத்தரவு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாட் சம்பளத்தை நிர்ணயித்து தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் இடைக்கால தடையுத்தரவு தற்போதைக்குப் பிறப்பிக்கப்படாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி தோட்டக் கம்பனிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு நீதிமன்றம் இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி, மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்டோரை எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்புமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(ம-7,10)

## புகையிரதம் மோதியதில் வெளிநாட்டவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த வெளிநாட்டவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

உடரட்ட மெனிகே ரயிலில் இருந்து எல்ல ரயில் நிலையத்திற்குப் பயணித்த வெளிநாட்டவர் நேற்று மாலை 4 மணியளவில் ரயில் சுரங்கப்பாதையில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

நானுஓயா மற்றும் இதல்கசின்ன ரயில் நிலையங்களுக்கு இடையிலான 19வது ரயில் சுரங்கப்பாதைக்கு அருகில் குறித்த வெளிநாட்டவர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், உயிரிழந்த வெளிநாட்டவரின் சடலம் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் ஹப்புத்தளை ரயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அதிகாரி தெரிவித்தார்.

(ம-7,10)

## மயிலத்தமடு வழக்கு கைதானவர்கள் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் த்தரை சிங்கள ஆக்கிரமிப்பிற்கு எதிராக கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 அன்று போராட்டமொன்றினை மேற்கொண்டிருந்த யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஏறாவூர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸார் போதிய சாட்சியங்களை முன்வைக்கத் தவறியமை, குற்றப்பத்திரிகையில் காணப்பட்ட முரண்பாடு, மேலும் குற்றச்சாட்டுக்களை முன்கொண்டு செல்வதற்கான எவ்வித முகாந்தரங்களும் இல்லை என்னும் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர்கள் 06 பேரும் ஏறாவூர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

06

தும்பறைப் பள்ளத்தாக்கு, கொத்மலை, புசல்லாவை, பதுளை, ஊவா, மஸ்கெலியா, இறக்குவானை, தெனியாய எங்கும் புதுப்பயிர் ஊடறுத்துச் சென்றது. குடிஜன மற்றிருந்த சிறு கிராமங்கள் எல்லாம் புதுப்பயிர்ச் செய்கையின் மத்திய தானங்களாக உருமாறின.

புதுப் பாதைகள், கோப்பியைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதும் கொழும்பினின்று அரிசி, உணவுப் பொருள்கள், தோட்டக் கருவிகள் முதலானவற்றைக் கொண்டு திரும்புவதுமாகிய எண்ணற்ற கரத்தைகளினல் நிறைந்து வழிந்தன.

அரசாங்கமும் மலைப்பிரதேசத்தின் முடிக்குரிய நிலங்களை ஏக்கர் ரூபா 3 சதம் 33 விகிதப்படி விற்றது. இக்காலத்தில் விலைப்பட்ட நிலங்களின் அளவைப் பின் வரும் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டும்.

1837 இல் விலைப்பட்ட நிலம் 3,660 ஏக்கர், 1838 ல் விலைப்பட்ட நிலம் 10,400 ஏக்கர், 1840 இல் விலைப்பட்ட நிலம் 42840 ஏக்கர், 1841 இல் விலைப்பட்ட நிலம் 78,685 ஏக்கர் ஆகும்.

இம்முடிக்குரிய நிலங்களை முதன் முதல் வாங்கியவர்கள் இந்நாட்டின் அரசாங்க உத்தியோகத்தரும், இராணுவ அதிகாரிகளுமாவர். ஆள்பதி உட்பட, நிர்வாக அதிகாரிகள், நீதிபதிகள், ஆங்கிலப் பாதிரிகள், குடியியற் சேவையாளர், இராணுவத்தினர் யாவரும் இக்காலத்தில் பெரும் கோப்பித் தோட்டச் சொந்தக் காரராயினர்.

இக்காலத்தில் விலைப்பட்ட நிலங்கள் யாவற்றிலும் உடனடியாகக் கோப்பி பயிரிடப்பட்டதென நாம் எண்ணுதலாகாது. ஏனெனில் பிற்காலத்தில் இந்நிலங்களை உயர் விலைகளுக்கு விற்கலாம் என்ற எண்ணத்துடன் காணிகளை வாங்கியவர்கள் பலர் இருந்தனர்.

இலங்கையில் கோப்பித் தோட்டங்கள் இத்தனை விரைவாகப் படர்ந்தமைக்கு இங்கிலாந்தில் இப்பொருளுக்கு ஏற்பட்ட கடும் மதிப்பும், அதற்கு அங்கு கிடைத்த நல்ல விலைகளுமே முக்கிய காரணங்களாகும். இக்காலத்தில் ஒரு அந்தர் கோப்பியின் விலை 120 ஷிலிங் வரை உயர்ந்தது. ஜோன் வெஸ்லி போன்ற சமய போதகர்களின் முயற்சிகளினால் மக்களிடையே மதுபானங்களையருந்தும் பழக்கம் குறைய, கோப்பி போன்ற பானங்களை அருந்தும் பழக்கம் அதிகரித்தது.

இலங்கையின் கோப்பி வளர்ச்சிக்குத் துணைபுரிந்த மற்றுமொரு காரணம், மேற்கிந்தியத் தீவுகளில் கோப்பி உற்பத்தியில் உண்டான பெரும் வீழ்ச்சியாகும். 1827 இல் மேற்கிந்தியத் தீவுகள் மூன்று கோடி இறாத்தல் கோப்பியை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தன. 1833 இல் அத்தீவுகளின் அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டதன் பயனக, கோப்பி உற்பத்தி பெரும் வீழ்ச்சியைக் கண்டது.

மேலும் 1837 தொடக்கம் இலண்டனில் இலங்கைக் கோப்பிக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரி, மேற்கிந்தியக் கோப்பியின் அளவுக்குக் குறைக்கப்பட்டது. முன்னர் மேற்கிந்தியக் கோப்பிக்கு 6 பென்ஸ் வரியும், இலங்கைக் கோப்பிக்கு 9 பென்ஸ் வரியும் விதிக்கப்பட்டன.

சு. டீ. றிற்லர் என்பவர், மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று கோப்பி உற்பத்தி முறைகளைக் கற்று, 1837 இல் நாடு திரும்பி அதனை விஞ்ஞான முறையில் பயிரிடும் வழிவகைகளைக் காட்டிக் கொடுத்தார். இவ்விதமாக, விரிந்து வந்த சந்தைகள், போட்டியின் குறைவு, விஞ்ஞானச் செய்கை முறைகள் என்னும் இவைகளே கோப்பியின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய பிரதான காரணங்களாகும்.

கோப்பிப் பயிருக்கு எதிர்காலம் மிகவும் திருப்தியானதென்று அறியப்பட்டதும், ஆங்கிலேயர் நூற்றுக்கணக்கில் கொழும்பில் வந்திறங்கினர்.

### இலங்கைக் கோப்பிக்கு 1840களில் ஏற்பட்ட வீழ்ச்சி

1844 இல் இங்கிலாந்து கட்டிலா (திறந்த) வியாபார முறையை மேற்கொண்டதன் பயனாக, ஜாவா, பிரேசில் எனும் நாடுகளிலிருந்து கோப்பி மலிந்த விலைகளில் அளவுப் பிரமாணமின்றி இலண்டன் சந்தைகளில் குவிந்தது. விலைகளும் படுமோசமாக வீழ்ச்சியடையத் தொடங்கின. 100 ஷிலிங் விற்ற ஒரு அந்தர் கோப்பியின் விலை 1848 இல் 45 ஷிலிங்காகவும், 1849இல் 27ஷிலிங்காகவும் குறைந்தது.

இங்கிலாந்தில் 1845-46 இல் பண நெருக்கடியும் ஏற்பட்டபடியால் இலங்கைத் தோட்ட முதலாளிகள், தமது தோட்டங்களின் விருத்திக்கு வேண்டிய பணத்தைக் கடன் வாங்க முடியாமற் போயிற்று. 1847 தொடக்கம் ஐந்து ஆண்டுகளுக்குக் கோப்பிச் செய்கையில் மந்தநிலை நீடித்தது. இக்காலத்தினுள் தோட்ட முதலாளிகள் பலர், மிகுந்த நட்டமடைந்து கோப்பிச் செய்கையைக் கைவிட்டனர்.

அதி விரைவில் பணக்காரராக முயன்றவர்கள், அவசரத்தில் அதிக விலைகளைக் கொடுத்து நிலங்களை வாங்கியவர்கள், தோட்டங்களில் சிக்கன மின்றிப் பணத்தைச் செலவிட்டவர்கள் யாவரும் தமது தோட்டங்களைப் பாதிவிலை, கால் விலைக்குக் கூட விற்க முடியாமல் அல்லற்பட்டனர்.

1843இல் 16,000 பவுணுக்கு வாங்கப்பட்ட ஒரு தோட்டம் 1847இல் 50 பவுணுக்கு விற்பனையாயிற்று. விடாமுயற்சியையும், சிக்கனத்தையும், விஞ்ஞான் முறையையும் பின்பற்றிய தோட்ட முதலாளிகள் மாத்திரம் தான், இவ்வீழ்ச்சியினின்று உயிருடன் தப்பிப் பிழைத்தனர்.

### தோட்டத் துரைமாரின் பிரச்சினைகளும் அவற்றின் தீர்வும்

இலங்கையில் ஐரோப்பியர், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்த நேரத்தில் அவர்களைப் பல் வேறுபட்ட பிரச்சினைகள் எதிர்த்து நின்றன. மலைநாட்டினில் போதிய நிலமின்மை தொழிலாளரின்மை, முதலின்மை, தெருக்களின்மை, புகையிர வீதிகளின்மை எனும் பிரச்சினைகளுக்கு அவர்கள் உடனடியாகத் தீர்வு காணவேண்டிய கட்டாய நிலை எழுந்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் கையாண்ட வழிவகைகளின் அடிச்சுவட்டில்தான் இலங்கையின் பொருளாதார முறையும் உருமாறியது.

**1. கோப்பிச் செய்கைக்குப் பொருத்தமான நிலம்**

கோப்பிச் செய்கைக்குப் பொருத்தமான சுவாத்தியமும் நிலங்களும், பழைய கண்டி இராச்சியத்தின் மாவட்டங்களிலேயே காணப்பட்டன. அப்பிரதேசங்களில் நிலத்துக்கான கேள்வி உச்ச நிலையை அடைந்த பொழுது, முதலாளிகள் அங்கு நிலவிய பழைய ஒழுங்குகளுடன் பிணங்க வேண்டிய நிலைக்குள்ளாயினர். கண்டி மாவட்டங்களில் ஒவ்வொரு குடியானவனும் காட்டு நிலங்களில் சேனைப் பயிர்களைச் செய்கை பண்ண உரிமை பெற்றிருந்தான்.

இச்சேனை நிலங்கள், சட்டப்படி குடியானவருக்குச் சொந்தமில்லாதிருந்த போதிலும், அவர்கள் அவற்றைப் பழைய பழக்கத்தின் அடிப்படையில் காலத்துக்குக் காலம் பயிரிட்டு வந்தனர். இப்பேர்ப்பட்ட காட்டு நிலங்களில் தான் கோப்பி முதலாளிகள் தோட்டங்களைத் திறக்கத் திட்டமிட்டு அவற்றை அரசாங்கத்திடம் விலைக்கு வாங்க முற்பட்டனர்.

முடிக்குரிய நிலங்களென எண்ணிய காடுகளை, கண்டியர் தமது சேனை நிலங்களென உரிமை பாராட்டவே, அரசாங்கம் அவற்றை உடனடியாக விற்க முடியவில்லை. வளர்ந்து வந்த புதுத் தொழிலுக்கு ஏற்பட்ட இடையூறுகளை அகற்ற ஆள்பதி சேர். கொலின் கம்பல் 1841ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தை இயற்றினர். இக்கட்டளைச் சட்டத்தின்படி குடியானவர், சட்ட முறைப்படி, தமது உடைமைக்கான உரிமையை நிரூபிக்க முடியாத நிலங்கள் யாவும், அரசாங்க முடிக்குரிய நிலங்களாயின.

புதுக் கட்டளைச்சட்டத்தின் தேவைகளுக்கேற்ப சொத்துரிமையை நிரூபிப்பதன் கடினத்தையும், வழக்கத்தின் பிரகாரம் மக்கள் பெற்றிருந்த உரிமைகளையும் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. இச்சட்டத்தை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டங்களும் குழப்பங்களும் விளைவித்த பொழுது, அரசாங்கம் இராணுவ உதவியுடன் அமைதியை நிலைநாட்டியதுமன்றிப் புதுச் சட்டத்தைக் மக்கள் பலவந்தமாக ஏற்கவும் செய்தது.

இவ்வாறாக ஒரு காலத்தில் அரசனுக்குச் சொந்தமாயிருந்த (கபடகம்) நிலங்கள் யாவும், கோப்பி முதலாளிகளின் தனிச் சொத்தாயிற்று. இதனால் கண்டியருக்குப் பல இன்னல்கள் விளைந்தன.

கண்டி நாட்டு வாசிகளுள் பெரும் பகுதியினர் தம் நிலங்களை இழந்தனர். காட்டுச் சேனைகளில் பிற உணவு வகைகளை உற்பத்தி செய்யும் உரிமையும் பறிபோயிற்று. அநேக காடுகள் அழிக்கப்பட்டதுமன்றி சில கிராமங்கள் முழுவதுமே அழிந்தொழிந்தன. அரசாங்கம் கிராம விஸ்தீரணத்துக்குச் சாதாரணமாக தேவைப்பட்ட நிலத்தைக் கூட விட்டுவைக்கவில்லை.

இத்தகைய மாற்றம் பற்றிக் கூறுமிடத்துக் குடியேற்ற நாட்டுச் செயலாளராகவிருந்த சேர். எமர்சன் ரெனன்ற் பின்வருமாறு எழுதியுள்ளார். ஆள்பதியும், ஆய்வுரைக் கழகத்தினரும் இராணுவத்தினரும், நீதிபதிகளும், மதகுருமாரும், குடியியல் அதிகாரிகளுள் பாதிப்பேரும் மலைநாட்டுக்குச் சென்று முடிக்குரிய காணிகளை யெல்லாம் வாங்கினர் ஏலத்திலே மற்றவர்கள் போட்டியிட்டு விலை கூறி இந்நிலங்களை வாங்குவதைத் தடுத்துக் கொள்ளை இலாபம் அடிக்கக் கருதிய அவர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்து...

னால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அதிகபட்சசில்லறை விலை ரூ.2,250 ஆக இருக்கும் என சிமெந்து நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## லிட்ரோ...

முறைக்கு வரும் எனக் கூறப்பட்டுள்ளது.

மாதாந்த எரிவாயு விலைத் திருத்தத்திற்கு அமைய இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7,10)

## வட மாகாண...

சீரற்ற காலநிலை காரணமாக நாடு பூராகவும் நேற்று பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது.

எனினும் வடமாகாண கால நிலையை கருத்தில் கொண்டு இன்று பாடசாலைகள் வழமைபோல் நடைபெறும் எனவும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்த மாணவர்களுக்கான க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கும் செயற்பாடுகளும் இன்று ஆரம்பமாகவுள்ளது. (ம-7,10)

## ஆபத்தை...

அகற்ற வேண்டிய மரங்கள் தொடர்பான விபரங்களுடன் 06.06.2024ஆம் திகதி பி.ப 3.45 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த புகைப்படத்துடன் கூடிய விபரங்களினை மென்பிரதியாக jaffna@dmc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 06.06.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய தென்மேல் பருவப் பெயர்ச்சி காலநிலையின் தாக்கம் யாழ் மாவட்டத்திலும் உணரப்படுகின்றமையினாலேயே குறித்த முன்னாயத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,10)

## மருத்துவராக...

களை உருவாக்கிக் காண்பித்து மருத்துவர் என அறிமுகப்படுத்தி கனடாவில் உள்ள ஒருவரிடம் ஒரு கோடியே 42 லட்சம் ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம், சுன்னாகத்தைச் சேர்ந்தவர் என்றும், 29 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதிசொகுசு கார் ஒன்றும், 15 பவுண் நகைகளும், 5 லட்சம் ரூபாய் பணமும் 5 கைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் தான் ஒரு மருத்துவர் என் பதற்குரிய போலி ஆவணங்களையும், அடையாள அட்டையையும் உருவாக்கியுள்ளார். அவற்றைக் கொண்டே அவர் மோசடிகளை மேற்கொண்டுள்ளார்.

கனடாவில் உள்ள ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ள இவர், மருத்துவ மேற்படிப்புக்காக புலமைப்பரிசில் கிடைத்துள்ளது என்றும், அதனால் வெளிநாடு செல்லவுள்ளேன் என்றும் கதைவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் காணி ஒன்று தனக்கு உள்ளது என்று தெரிவித்து அதற்குரிய ஆவணங்களையும் அனுப்பியதுடன், அதை ஒரு கோடியே 42 லட்சத்துக்கு விலை பேசியிருக்கின்றார். அதை நம்பி கனடாவில் இருந்து உண்டியல் மூலமும், வங்கிக் கணக்கு ஊடாகவும் ஒரு கோடியே 42 லட்சம் ரூபாய் கைமாறியுள்ளது.

பின்னர் இவர் அனுப்பிய காணி ஆவணங்கள் போலியானவை என்பதை அறிந்துகொண்ட கனடா தரப்பு இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது.

அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடமாடுவதை அறிந்து கொண்ட யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

இவர் தன்னை மருத்துவர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு பல வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை மேற்கொள்கின்றேன் என்று தெரிவித்து வெளிநாடுகளில் உள்ள பலரிடம் பணம் பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

சந்தேகநபரால் பலகோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்றும், விசாரணைகளில் மேலதிக விடயங்கள் வெளிவரலாம் என்றும் நம்பப்படுகின்றது. (ம-7,10,33)

## சீரற்ற...

என 12 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவால் 23 மாவட்டங்களைச்சேர்ந்த 87 ஆயிரத்து 379 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் 119 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 23 ஆயிரத்து 706 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

களுகங்கை, நில்வள கங்கை மற்றும் கிங் கங்கை ஆகிய வற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து வருகின்றது.

இதனால் சில பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. அதே வேளை, அனர்த்தங்கள் இடம்பெறும் பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ரவுடி...

உரையாற்றும் போதே அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் "2022 ஆம் ஆண்டு மக்கள் எழுச்சியின் உண்மையான அபிலாஷைகளை நிலை நிறுத்தக்கூடிய ஒரே அரசியல் சக்தி மற்றும் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி மாத்திரமே.

அரசியல்வாதிகள் அரகலயவில் இருந்து பாடம் கற்கவில்லை. மாறாக போதைக்கு அடிமையானவர்களின் எழுச்சி எனக்கூறி மக்களின் எழுச்சியை அவமானப்படுத்துகின்றனர்.

மக்கள் குறிப்பாக இளைஞர்கள் எந்தவொரு அரசியல் சக்தி மீதும் விசுவாசம் இன்றி பொதுவான அபிலாஷைகளுடன் வீதிக்கு இறங்கினர். இதனை ஆட்சியாளர்கள் உணரவில்லை.

மோசடி மற்றும் ஊழல் அற்ற ஒழுக்கமான, நீதியான நாட்டை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை அடக்கியாள ஆரம்பித்துள்ளனர்.

அரச சொத்துகளை விற்க முனைவதுடன், அரகலயவின் பின்னரும் பழைய பாதையிலேயே பயணிக்கிறார்கள்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 5493
M 1 2 5 8 0 8
அதிர்ஷ்ட சம்பத M 5 8 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 68

தன நிதானய
திகதி - 2024.06.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1523
N 08 21 61 77 N
52792

மெகா பவர்
திகதி 03/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1841
A 16 16 22 25 44
83603

லக்கி 7 VIP
திகதி 2024.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 319
P 1 1 9 0 6 5 P

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3735
சீட்டிழுப்பு திகதி 03.06.2024
L 08 48 64 79
L 89932

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.03
சீட்டிழுப்பு இலக்கம் 0802
கடகம் 09 19 31 37 கடகம்
09469 11

சனிதா
திகதி 2024.06.03 வெற்றி வாரம் 4628 வர்ணம் இளம் நீலம்
04 41 48 59 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,538,466.80
97277

ஜயோதா
திகதி 2024.06.03 வெற்றி வாரம் 2030 வர்ணம் செம்மஞ்சள்
10 18 40 50 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,704,110.00
96313

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4179 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.03 தினம் திங்கட்கிழமை
21 27 35 53 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00
254615

அத கோடிபதி
திங்கட் கிழமை
வெற்றி வாரம் : 2293
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 117,361,193.60
21 34 42 66 I
374351

கப்ருக
S 29 10 18 21 54
1643
03.06.2024 திங்கள்
945121
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,689,501.40

SUPER BALL
வாரம் 2467 வர்ணம் ஊதா திகதி 03.06.2024 தினம் திங்கள்
21 33 56 63 Y
71944
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,425,948.80

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
03.06.2024 வெற்றி வாரம் 201 வர்ணம் ஊதா
J 8 9 5 1 0 9
65331 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,297,012.00


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Laptop விசேட விலைக்கழிவில்



O/L , A/L
மாணவர்களுக்கானது
I5 Laptop
48750/=
தொடக்கம் விசேட
விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்
SKY Computer
189 1/1 K.K.S Road, Jaffna (C-0517)
021 222 1417,075 069 8608



## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0519)


## வட மாகா...

14 முன்னணித் தனியார் துறைக் கம்பனிகள் அடங்கிய தூதுக்குழுவினர், இலங்கை ஊழியர் சம்மேளனத்துடன் சேர்ந்து, வட மாகாணத்தில் பிரதான துறைகளில் உபாய மார்க்க மிக்க முதலீடுகள், வர்த்தகம் மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள் என்பவற்றை ஆராய்வதற்காக உயர் மட்ட விஜயத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஊழியர் சம்மேளனத்தின் பங்காண்மையுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விஜயம் வட மாகாணத்தில் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை எடுத்துக்காட்டி, பிரதான பங்கீடு பாட்டாளர்களுக்கு மத்தியில் கலந்துரையாடலையும் ஒத்துழைப்பினையும் போஷித்து வியாபாரங்களுக்கும் சமுதாயங்களுக்கும் நன்மை பயக்கும் பங்காண்மையினை வசதிப்படுத்துவதே விஜயத்தின் பிரதான குறிக்கோள்களின் மத்தியில் கொண்டுள்ளது.

வட மாகாண பிரதம செயலாளரான லட்சுமணன் இளங்கோவன் அவர்களுடனான சந்திப்புக்கு மேலதிகமாக, வட மாகாணத்தில் வியாபாரம் செய்வதற்கான வாய்ப்புக்கள், கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகைத் தோற்றப்பாடு பற்றிய பகுப்பாய்வினை வழங்குவதற்கான பங்கீடு பாட்டாளர் கலந்தாலோசிப்பினை விஜயம் உள்ளடக்கியிருந்தது. இதற்குப் பிரதம செயலாளர் அலுவலகம் தலைமை வகித்தது.

அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டைக்கான விஜயத்தினையும் தொழில் முனைவோர் மற்றும் வியாபாரச் சங்கங்களுடன் வலையமைப் புருவாக்க நிகழ்வினையும் அரசாங்க அமைப்புக்கள் மற்றும் பிராந்தியச் சம்மேளனங்கள் உள்ளிட்ட பிரதான துறை சார் செயற்படுனர்களுடன் கலந்தாலோசிப்பினையும் விஜயம் உள்ளடக்கியிருந்தது.

(ம-7,10)

## ஆளும் கட்சி கூட்டத்தில் மோதல்

நேற்று மாலை நடைபெற்ற ஆளும் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே மேற்கொண்ட தாக்குதலில் சக பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவே காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-7,10)


## A/L Day Class

வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் நாளை 3 p.m
முன்னிலைப் பெறுபேறுகளை பெற்றுத்தந்த எம் செல்வங்களை வாழ்த்துவதுடன்...
தவற விட்டவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்
போட்டி ஆசிரியர்களின் பொய்யான விளம்பரத்திற்கு எமது நிறுவன கடந்த பெறுபேறு சமர்ப்பணம்...
DCM (1087)
யாழ். நகர்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
077 778 9815
நிர்வாகம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
## ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0518)
076 825 7716 (ஆகாஸ்)



## வேலையாட்கள் தேவை

1. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
HND or NCT-Civil/Qs NVQ Level with preparing Bill.
2. கணிய அளவையியலாளர் (QS)
HND or NCT-Civil/Qs NVQ Level with preparing Bill.
3. கணக்காளர் (Accountant)
4. கணக்கு உதவியாளர் (Accountant Assistant)
5. அலுவலக உதவியாளர் (Office Assistant)
(1082)
Mail :-shaganaconstruction@hotmail.com (077 210 0749)
(காலை 8.00 - மாலை 5.00 வரை) யாழ்ப்பாணம்



## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(1035)



## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 2500.00 - 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs. 2000.00 - 2500.00 |
| பெயின்ரர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| வெல்டர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs. 2500.00 - 3000.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
(1082)
தொடர்பு: 077 210 0749
(காலை 7.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்



## உடனடி வேலை வாய்ப்பு

கொழும்பில் இயங்கி வரும் SATTELITE மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு

- டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய TECHNICIANS.
- எலக்ட்ரானிக்ஸ் REPAIR செய்யக் கூடிய TECHNICIANS.
- வேலை பழக விரும்பும் O/L அல்லது A/L படித்த இருவர் தேவை



உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் கிடைக்கும், வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
(1070)
ராஜன் 077 771 0785



## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன



நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா?
உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.
எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.
ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம்.
(C-0519)
V2 TRAVELS 0768226244



## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
(C-0519)
V2 GUEST 0743900360 0743900361



A/L தொழினுட்பப்பிரிவு
## Techna
Technical Institute
தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
04.06.2024 செவ்வாய்க்கிழமை மாலை 3.30மணிக்கு
(1084)
செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன
A/L 2023 REPEAT BATCH
paper classses, Theory classes, செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன
விஷேட பிரிவுகள்
A/L 2024 பிரிவு
A/L 2025 பிரிவு
மேலதிக விபரங்களுக்கு 077 170 3549
விரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.


## 8ஆம் ஆண்டு நினைவுகள் 7ஆம் ஆண்டு





பிறப்பு: 12.05.1939 இறப்பு: 10.08.2016

**வயிரமுத்து சிவலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
திதி: அட்டமி

பிறப்பு: 23.11.1950 இறப்பு: 24.05.2017

**சிவலிங்கம் கனகமணி**
திதி: திரயோதசி

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து நல்வழிப்படுத்திய அன்புத் தெய்வங்கள். ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறவில்லை உங்கள் பிரிவுத் துயரம். உருவமாய் இல்லை என்றாலும் தெய்வமாய் எங்களுடனே என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.
(0090)
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 38 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(1086)
(குரு) 077 029 4164,
077 329 4130, 077 294 1521


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2024 இல் அச்சிட்டு ...